


# தமிழரசு

1-4-1997 ரூ. 3

உள்ளே...





படம் : திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப.

# இந்த இதழில் ...


★ இண்டர்நெட்டில் கலைஞரின் இலக்கியப் பக்கம் . . . . . . . . . 2

★ கல்யாண்ஜி கவிதைகள். . . . . . 3

★ தமிழகச் சுற்றுலாத் தலங்கள்
- கே. இளங்கோ, இ.ஆ.ப.. . . . . . 4

★ சோறு
- விழி. ப. இதயவேந்தன் . . . . . 15

★ தமிழில் மருத்துவச் சீட்டு
முதல்வரின் வாழ்த்துச் செய்தி 17

★ நல்ல திரைப்படம்
- ஞான ராஜசேகரன் . . . . . . 20

★ மாட்டுப்பற்று
- கி. ராஜநாராயணன் . . . . 23

★ ஜென் கதைகள் . . . . . . . . . 25

★ எங்கள் ஊர் பிரச்சினை . . . 30

★ உணவே மருந்து -
மருந்தே உணவு
- டாக்டர் சு. கோபாலகிருஷ்ணன் . 36

★ வறுமை ஒழிப்பு மற்றும்
வேலைவாய்ப்புத் திட்டங்கள். . 41

★ ஆசிரியர் மடல். . . . . . . . . 48



## தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2028
பங்குனித் திங்கள் : 19
மலர்: 27 இதழ்: 19
1.4.1997
விலை: ரூ.3

# இன்டர்நெட்டில் கலைஞரின் இலக்கியப் பக்கம்

‘இன்டர்நெட் தொழில்நுட்பத்தைக் கொண்டு, தமிழில் அனைத்துலக ரீதியில் மின் அஞ்சலிலும் (e-mail), World Wide Web-லும் செய்திப் பரிமாற்றம் நிகழ்வதை, 1995 அக்டோபரில் சாத்தியமாக்கிய சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் இன்டர்நெட் ஆய்வு மேம்பாட்டு நிறுவனம், தற்போது முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் இலக்கியப் பக்கம் அரங்கேறு வதற்கு ஆதரவு கொடுக்கிறது.

சிங்கப்பூரின் மாண்புமிகு அதிபர் திரு. ஓங் தெங் சியோங் - ஆங்கில, சீன, மலாய், தமிழ்க் கவிதைகள் இன்டர்நெட்டில் 1995 அக்டோபரில் அரங்கேற்றி (http://www.irdu.nus.sg/poem) இன்டர்நெட் தொழில்நுட்பத்தைத் தமிழில் தொடக்கிவைத்தார். அதன் மூலம் இன்டர்நெட்டில் இடம்பெறும் முதல் இந்திய மொழி என்ற தகுதியைத தமிழ் பெற்றது.

தொடர்ந்து, சங்க இலக்கியம், தமிழ்க் கணினி ஆய்வு, தமிழ் கற்றல்- கற்பித்தல் தொடர்பான ஒரு பக்கத்தை 1996ஆம் ஆண்டு பிப்ரவரியில் இந்நிறுவனம் அறிமுகம் செய்தது. PC, Mac, Unix ஆகிய மூன்று கணினிகளிலும் தமிழ்ச் செய்திப் புரிமாற்றம் நிகழ்வதை முதன்முதலில் சாத்தியமாக்கிய சிங்கப்பூரின் இன்டர்நெட் ஆய்வு மேம்பாட்டு நிறுவனம் (Internet Research & Development Unit/National University of Singapore) ஒரு சிறந்த இலக்கியவாதியின் [illegible] வாகத் துணை நிற்பதில் [illegible]

[illegible]


அரசியல் கலப்பில்லாத இந்தப் பக்கத்தில் கலைஞர் மு. கருணாநிதியின் இலக்கியப் படைப்புகள் மட்டுமே இடம் பெறும். இந்தப் பக்கத்தை http://www.irdu.nus.sg/~kalaimk என்ற இன்டர்நெட் முகவரியில் காணலாம்.

கலைஞரின் வாழ்க்கை வரலாறு, இலக்கியம சார்ந்த அவருடைய விமர்சனப் படைப்புகள், நான்கு வாரங்களுக்கு ஒரு முறை கலைஞர் எழுதும் புதிய படைப்பு, அவருடைய படைப்புகள் பற்றிய கருத்துரைகள் போன்ற பல்வேறு கூறுகள் இவ்விலக்கியப் பக்கத்தை அலங்கரிக்கும்.

தொடக்கமாக அவர் எழுதிய ‘குறளோவிய’த்தின் முதல் அதிகாரம், சங்கத் தமிழின் முதல் அதிகாரம், குறளோவியத்திற்குக் கலைஞர் எழுதிய முன்னுரை ஆகியவை இடம்பெற்றுள்ளன. இனி ஒவ்வொரு வாரமும் இந்தப் பக்கத்தில் கலைஞரின் இலக்கிய- விமர்சனப் படைப்புகள் இடம் பெறும்.

இன்டர்நெட்டில தமிழ்த் தொழில்நுட்பத்தை 1995 அக்டோபரில் சாத்தியமாக்கிய திரு. நா.கோவிந்தசாமி, இப்பக்கத்தின் பொறுப்பாளராக உள்ளார். ‘குமுதம்’ வார இதழின் பொறுப்பாசிரியர்- எழுத்தாளர் மாலன் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுகிறார்.

-தேசியப் பல்கலைக் கழகம்
சிங்கப்பூர்.



நீ வருவதற்காகக்
காத்திருந்த நேரத்தில் தான்
பளிங்குபோல்
அசையாதிருந்த தெப்பக்குளம்
பார்க்க ஆரம்பித்தேன்.
தலைகீழாய் வரைந்துகொண்ட
பிம்பங்களுடன்
தண்ணீர் என் பார்வையை
வாங்கிக்கொண்டது முற்றிலும்!
உன்னை எதிர்பார்ப்பதையே
மறந்துவிட்ட ஒரு கனத்தில்
உன்னுடைய கைக் கல்பட்டு
உடைந்தது
கண்ணாடிக் குளம்;
நீ வந்திருக்க வேண்டாம்
இப்போது!



## கல்யாண்ஜி கவிதைகள்



எங்கோ சென்றுகொண்டிருக்கிற
பறவையைத்தான் நாம்
இங்கே பார்க்கிறோம்.
பேரியக்கத்தின் சிறுவிள்ளலாக
ஆறு நம் முன் ஓடி
அலையடிக்கிறது.
ஒரு சிறு கடிப்பை முன்வைத்தே
முழுத் தின்பண்டத்தின் மிருதுவையும்
நாம் ருசிக்க நேர்ந்துவிடுகிறது.
ஒருபோதும் நாம் பார்க்கமுடியாது
உருண்டையாக இந்த வாழ்வை
என்று உணர்கையில்
கையில் இருக்கிற ரொட்டித் துணுக்கில்
காணமுடிகிற நுரைப்புப் பள்ளங்களில்
நிம்பிவழிகின்றன,
ஆனந்தத்தின் திவலைகள்!

அட்டைப்படக் கட்டுரை



நான்காம் அட்டைப்பட உதவி
**திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப.,**

தமிழ்நாடு - தமிழர்களின் தாயகம்.

தமிழ் - மிகப் பழமையான, மிக வளர்ச்சி பெற்ற இந்திய மூத்த மொழிகளுள் ஒன்று.

தனித்தன்மை வாய்ந்த இனப் பெருமை கொண்டதே இந்த மண். எனினும் இந்தியப் பண்பாடுகளோடு இரண்டறக் கலந்துநிற்கும் ஒரு பகுதியாக, மாபெரும் நாகரிகத்தின் கனிச் சோலையாக இம் மாநிலத்தின் வரலாறு மணம் வீசிக் கமழ்கிறது.

# தமிழகச் சுற்றுலாத் தலங்கள்

தமிழ்நாடு - கோவில்கள் மலிந்த கலைக்கோட்டம், இங்கே ஆயிரக் கணக்கில் எழுந்துள்ள ஆலயங்கள் அந்தந்தக் கால நிலையை, சிற்பக் கலையின் எழிலை, தங்களை எழுப்பிச் சிறப்பித்த ஏந்தல்களைக் கண்ணாடி போல் காட்டும் வார்ப்படங்கள்.

தமிழ்நாட்டின் வடக்கே பல்லவர்களும், தெற்கிலும் தென்மேற்கிலும் பாண்டியர் சேரர்களும், கிழக்கே சோழர்களுமாகத் தனித் தனியே கோலோச்சினாலும் பெரும்பாலும் ஒப்புரவு கொண்டவர்களாகவே வாழ்ந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டின் கலாச்சாரம் ஏசுநாதர் பிறந்த முதல் சில நூற்றாண்டுகளிலேயே சீன நாட்டின் எல்லைவரை பரவியிருந்திருக்கிறது. அதற்குரிய அடையாளச் சின்னங்கள் கம்போடியா, வியட்நாம், மலேசியா முதலான கீழை நாடுகளில் இன்றும் காணப்படுகின்றன. கம்போடியாவிலும், வியட்நாமிலும் உள்ள தெருக்கள் வீதிகள் என்னும் தமிழ்ச் சொல்லினால் இன்றைக்கும் வழங்கப்படுகின்றன.

**சென்னை**

வானளாவும் கட்டிடங்கள், பரந்து நீண்ட கடற்கரைகள், பசுமை கொழிக்கும் பூங்காக்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்கள் யாவும் தன்னகத்தே கொண்ட சென்னைமாநகர், தமிழகத்தின் தலைநகர்.

கோட்டைக்குள் உள்ள புனித மேரி மாதாகோவில் கி.பி.1680ல் கட்டப்பட்டிருக்கலரம் என நம்பப்படுகிறது. இதுதான் இந்தியாவில் முதன் முதலில் கட்டப்பெற்ற பிராட்டஸ்டண்ட் கிறித்துவ ஆலயமும், ஆசியாவிலேயே மிகப் பழமையானதும் ஆகும்.

**கோட்டை அருங்காட்சியகம்**

கோட்டைக்குள் இருக்கும் அருங்காட்சியகம் வரலாற்றுக் கருவூலமாகும். தென்னாட்டில் கிழக்கு இந்தியக் கம்பெனியின் நடவடிக்கைகளைப் பற்றிய வரலாறுகளை எடுத்துரைக்கும் கணகவர் தடயங்கள் இங்கே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. படைக்கலன்கள், உடை வகைகள், நாணயங்கள் பதக்கங்கள், பீங்கான் பாத்திரங்கள் ஆகியவற்றைக் கொண்ட பிரிவுகள் குறிப்பிடத்தக்கன.

**அண்ணாசதுக்கம், எம்.ஜி.ஆர் சமாதி**

கோடிக்கணக்கான மக்களின் இதயக் கோவிலிலே குடியேறி தங்களது மூத்த அண்ணனாகவே இலட்சோப லட்சம் மக்களால் அண்ணா என்று பாசம் பொங்க அழைக்கப் பெற்றவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். ஒப்புவமை இல்லாத மக்கள் செல்வாக்குடன் ஒளி வீசிய அவர், தலைசிறந்த அரசியல் சிற்பி, முன்னாள் தமிழக முதல்வர்.

மெரினா கடற்கரையின் வடகோடியில் அண்ணா அடக்க மேடை அமைந்துள்ளது. இதன் நுழைவாயிலில் யானைத் தந்தங்கள் போன்று கவர்ச்சியான முறையில் இருபுறமும் எழிலுற அமைக்கப்பட்டுள்ளது. அடக்க மேடையை ஒட்டியே நெடிதுயர்ந்து நிற்கும் நினைவுத் தூண் நம் நெஞ்சம் கவரத்தக்கது.

அண்ணாவின் எண்ணக் கருவூலங்களைப் போன்றே அணையா விளக்கொன்று இங்கே எரிந்து கொண்டேயிருக்கிறது. சுற்றிலும் அழகுமிகு பூங்கா அமைதி தவழுவதாக அமைந்துள்ளது.

அதன் அருகிலேயே மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள் சமாதி அழகுற நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் சமாதிக்கும் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் நாள்தோறும் வந்துபோவதை நாம் காணலாம்.

மெரினா கடற்கரையின் தென்கோடியில் சாந்தோம் கதீட்ரல் பாசிலிகா என்னும் கிறித்துவத் தேவாலயம் அமைந்துள்ளது. 1896ல் கட்டி முடிக்கப்பெற்றுப் புனிதம் செய்யப்பட்ட இக்கோவில் ஜெர்மானிய கோத்திக் கட்டிடக் கலையெழிலைக் கொண்டதாகும்.

**செயிண்ட் தாமஸ் மவுண்ட்**

புனித தோமையர் மலை என்பது அந்த யேசுபக்தர் வாழ்ந்ததும் மறைந்த இடமுமாகும். பழம் பெருமைமிக்க இக்குன்றின் உச்சியில் உள்ள மாதா கோவிலில் சிலுவை ஒன்று இருக்கிறது.

**காந்தி, இராஜாஜி, காமராசர் நினைவாலயங்கள்**


கிண்டியில் ஆளுநரின் மாளிகையான ராஜபவனத்தை அடுத்து மாபெரும் தலைவர்கள் மகாத்மா காந்தியடிகள், இராஜாஜி, காமராசர் மூவருக்கும் நினைவகங்கள் எழுப்பப்பெற்று உள்ளன. இந்திய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் முன்னணித் தளபதிகள் இவர்கள்; நாட்டுக்கு நல்வழி காட்டிய சிற்பிகள்.

**- கே. இளங்கோ, இ.ஆ.ப.,**



### கபாலீசுவரர் கோவில்

மயிலார்ப்பூரில் உள்ள கபாலீசுவரர் கோவில் கம்பீரமானது; காட்சிக்கு இனியது. புராணக் கதையின்படி, சிவபெருமானின்



வரம் வேண்டி முக்தி பெறுவதற்காகப் பார்வதிதேவி மயிலாக உருவெடுத்து இங்கேதான் அவரை வழிபட்டாராம்.

### பார்த்தசாரதி கோவில்

திருவல்லிக்கேணியில் எழுந்துள்ள வைணவக் கோவில் மிகவும் அழகானது. எட்டாம் நூற்றாண்டில் பல்லவ மன்னர் ஒருவரால் கட்டப்பெற்றது. விசயநகர அரசர்களாலும் ஏனைய வேந்தர்களாலும் பலமுறை புதுப்பிக்கப்பெற்றது.

### தேசியக் கலைக்கூடம்

எழும்பூர் பாந்தியன் சாலையில், எழில் கொஞ்சும் எடுப்பான பெரும் மாளிகையின் தேசியக் கலைக்கூடம் அமைந்துள்ளது.

இக்கட்டிடம் இந்துஅராபியக் கட்டிடக் கலையெழிலுக்கு நேர்த்தியான ஒரு சாட்சியாக நெஞ்சைக் கவர்கிறது. 'மாடர்ன் ஆர்ட்' எனப்படும் நவீன ஓவியமும், பழைய வண்ண ஓவியங்களும் கொண்ட கலைச் சோலையாக இது காட்சி தருகிறது. இராசபுதன, முகலாய தென்னிந்திய வகைகளைச் சார்ந்த சில அருமையான வண்ண ஓவியங்களும் இங்கே இடம் பெற்றிருக்கின்றன.

### அரசு அருங்காட்சியகம்

தேசியக் கலைக்கூடத்தை ஒட்டியே அரசு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவப்பெற்றது இது. இங்குள்ள அருங்காட்சிப் பொருள்களில் அமராவதியில் உள்ள புத்த தூபிப் பகுதியிலிருந்து மீட்கப்பட்ட இரண்டாம் நூற்றாண்டுக் காலத்திய அருமையான சிற்பப் பொருட்கள் அடங்கிய பிரிவு குறிப்பிடத்தக்கது. இதைத் தவிர, சிறுவர் அருங்காட்சியகமும் இப்போது தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

### வள்ளுவர் கோட்டம்

மனித குலச் சிந்தனைகளின் மலையுச்சியான தமிழ்மறையாம் திருக்குறளை, உலகுக்கு அளித்த செந்நாப்புலவர் திருவள்ளுவரின் நினைவாக எழுப்பப்பட்ட கலைச் சின்னமே வள்ளுவர் கோட்டம். சென்னை நுங்கம்பாக்கத்தில் எழில் கொஞ்ச இது எழுந்துள்ளது.

இதன் ஒரு பிரிவு திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ள தேர்ப்பகுதி, இன்னொன்று பரந்த கலைக்கூடம். தேர்ப்பகுதி, பாதி கருங்கல்லாலும், மீதி கான்கிரிட்டாலும் கட்டப்பட்டது. திருவாரூர் தேரின் வார்ப்படம் போல் இது சிற்பச் சித்திரங்களுடன் அழகுற வடிக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 106 அடி (29 மீட்டர்) கலை அரங்கம் நீண்ட இரும்பு உத்திரங்களைக் கொண்டு கட்டப்பட்டது. 220 அடி (64 மீட்டர்) நீளமும் 100 அடி (30 மீட்டர்) அகலமும் கொண்ட இந்தப் பரந்த அரங்கில் ஒரு தூண் கூட இடையில் இல்லை.

ஒரே நேரத்தில் 4000 பேர்


உட்கார வசதியுள்ள இந்த வள்ளுவர் கோட்டம் ஆசியாக் கண்டத்திலேயே மிகமிகப் பெரிய கலை அரங்கமாகக் கருதப்படுகிறது. தொன்று தொட்ட கலைத்திறன் வாய்ந்த சிற்பிகளின் ஆற்றலும் இக்காலத்திய மிக நவீன பொறியியல் நுட்பங்களும் கலந்து கனிந்த கலைக் கோவிலே வள்ளுவர் கோட்டம்.

**கலாச்சேத்திரம்**

சென்னையின் தென்பகுதியான திருவான்மியூருக்கு அருகில் கிராமிய சூழ்நிலையில் அமைந்துள்ளது கலாச்சேத்திரம். தென்னிந்திய நாட்டிய இசைக் கலைகளுக்கு மறுமலர்ச்சி அளிக்கும் மாபெரும் பணியைக் கடந்த முப்பது ஆண்டுகளாகப் புரிந்துவரும் உலகப் புகழ்பெற்ற கலை நிறுவனம் இது.

**மெரினா கடற்கரை**

உலகிலேயே மிக நீண்ட கடற்கரைகளில் இது இரண்டாவது. ஏறத்தாழ 15 கிலோமீட்டர் நீளமுள்ள வண்ணப் பூங்காக்கள் அமைந்த வெண்மணற் பரப்பில் அமர்ந்து, வீசிடும் தென்றலில் திளைத்து சென்னை வாழ் மக்கள் ஆசையோடு பொழுது போக்கி மகிழும் அருமையான திறந்தவெளி மெரினா.



**காஞ்சிபுரம்**

இந்தியாவின் ஏழுபுனித நகரங்களில் காஞ்சிபுரமும் ஒன்று. பன்னெடுங்காலமாகக் கல்விக்கும், கலாச்சாரத்திற்கும் தலை சிறந்த பீடமாகக் காஞ்சிபுரம் திகழ்ந்து வந்திருக்கிறது. இந்து மதத்தோடு சமண சமயமும் பவுத்த நெறியும் இங்கே செல்வாக்குப் பெற்று வளர்ந்திருக்கின்றன. ஆதி சங்கரர் காமகோடிபீடம் என்னும் சமய அமைப்பை இங்கே நிறுவியுள்ளார்.

காஞ்சிபுரத்தில் தனிச்சிறப்பு வாய்ந்த கட்டிடக்கலை யெழிலுக்குக் கட்டியம் கூறும் கம்பீரமான கோவில்கள் உள்ளன. வைகுந்தப் பெருமாள் கோவில், ஏகாம்பரேசுவரர் கோவில், வரதராஜர் கோவில், கைலாசநாதர் கோவில், காமாட்சியம்மன் கோவில், சக்தீஸ்வரர் கோவில் முதலானவை தென்னிந்தியக் கோவில் சிற்பக்கலை வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சி மாணவர்க்கு அருமையான வாய்ப்புக்களை வழங்கக் கூடிய பாடப் பனுவல்களாகும். நேர்த்திமிகு பட்டுப்புடவைகளுக்கு உலகப் புகழ் பெற்ற காஞ்சிபுரத்திலும் அதன் சுற்று வட்டாரத்திலும் ஆயிரக் கணக்கான நெசவாளர் குடும்பங்கள் தங்கள் தறிகளில் வண்ணக்கோல எழில் கொஞ்சும் பட்டுத் துணி நெய்து வாழ்கிறார்கள்.

**ஏலகிரி மலை**

வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் தனித்து நிற்கும் கவர்ச்சிமிக்க சுற்றுலாக் குன்று. உடல் நலத்துக்கு உகந்த பருவ நிலை, பசுமை கொஞ்சும் இயற்கையெழில், முருகன் கோவில் இந்த இடத்தில் காணக்கூடிய காட்சிகள். இதன் உயரம் சுமார்1000 மீட்டர்கள்.

**திருவண்ணாமலை**

புகழ்பெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்று திருவண்ணாமலை. பஞ்ச பூதங்களில் ஒன்றான நெருப்பின் வடிவமாக சிவன் இங்கே வழிபாடு செய்யப்படுகிறார்.

இரமண முனிவர் ஆசிரமம். இங்கே உள்ளது; இந்தியாவிலிருந்து மட்டுமன்றி உலகம் முழுவதிலுமிருந்தும் பக்தர்களையும், பார்வையாளர்களையும் இது ஈர்க்கிறது.

**செஞ்சிக்கோட்டை**

வரலாற்றுப் பெருமையும் கலையெழிலும் படைத்த செஞ்சிக்கோட்டை நம் நெஞ்சைக் கவர்வதாகும். தேசிங்குராஜன் கொடி கட்டி ஆண்ட சரித்திரச் சிறப்புடையது இந்தக் கோட்டை.

**சிதம்பரம்**

பரதக் கலையின் முழு முதற்பொருளான நடராசர் ஆனந்த நடனமாடும் கோலத்தில் காட்சி தரும் இடம்தான் சிதம்பரம். சோழ மன்னன் குலோத்துங்கனால் பொன் ஓடு வேயப்பட்ட இந்தக் கோவிலில் பரதக் கலையின் 108 வகைத் தோற்றங்களும் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஆனித் திருமஞ்சனம் ஆருத்ராதரிசனம் ஆகியவை இங்கே சிறப்பாகக் கொண்டாடப்படும் திருவிழாவாகும். சிதம்பரத்தில் 'நாட்டியாஞ்சலி' நாட்டியக் கலைவிழா பிப்ரவரி-மார்ச் மாதத்தில் நடைபெறும் குறிப்பிடத்தக்க நாட்டிய விழாவாகும்.

**பிச்சாவரம்**

சிதம்பரத்திலிருந்து 13 கி.மீ. தூரத்திலேயே பிச்சாவரம் இருக்கிறது. கிழக்குக் கடற்கரையில் மூவாயிரம் ஏக்கர் பரப்பளவுக்கு உப்பங்கழிகள் உள்ளடங்கி இருக்கும் இது, அடர்ந்த காடுகளைக் கொண்ட தீவுகளின் கூட்டமாகும். படகுப் பயணத்துக்கும் மீன் பிடிப்புக்கும், நீர் சருக்கு விளையாட்டுக்கும் இங்குள்ள அமைதியான கடல்நீர் ஏற்ற இடம்.


**பூம்புகார்**

சிலப்பதிகாரத்தின் பிறப்பிடமான பூம்புகார் வங்காள விரிகுடாக் கடலோரத்தில் இன்று சின்னஞ்சிறு கிராமமாகச் சிறுத்துக்கிடந்தாலும் ஒரு காலத்தில் சோழப் பேரரசர்களின் துறைமுகப் பட்டினமாக விளங்கியது. கீழை நாடுகளோடும், கிரேக்கம், ரோமாபுரி ஆகிய மேலை நாடுகளோடும் அது வணிகத் தொடர்பு வைத்திருந்தது. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் பண்டைய பூம்புகார் சிறப்பைப் படம்பிடித்துக் காட்டுகிறது.


இங்குப் புதிதாக எழுந்துள்ள கலைக்கூடம், ஒரு காலத்தில் பெருமையோடு திகழ்ந்த இத் துறைமுகப்பட்டினத்தின் வரலாற்றுச் சிறப்புகளை நினைவுறுத்தி சிலப்பதிகாரக் காட்சிகளை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துவதாக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டதாகும்.

**தஞ்சாவூர்**

நாற்புறமும் அகழிகள் சூழ்ந்த பெரிய அரண்மனைக்கோட்டையினுள் பிரகதீசுவரர் கோவில் உள்ளது. சிற்பக்கலையின் செழுமை மிகுந்த இப் பெரிய கோவில், பிற்காலச் சோழர்களில் பெரும்புகழ் பெற்ற மாமன்னன்



இராஜ இராஜ சோழனால் கட்டப்பெற்றது. மொத்தம் 66 மீட்டர்கள் உயரமுள்ள மிகப் பெரிய கோபுரம் கொண்ட இந்த ஆலயத்தின் மூலக்கருவறையின் மேலேயுள்ள விமானம் எடுப்பான ஒரு சிறப்பு அம்சம். இது அந்நாளையப் பொறியியல் கட்டிடக் கலையின் நுட்பமான அற்புதம்.



கோவில் வாசலைக் கடந்து சென்றால், உள்ளே நந்தியைக் காணலாம். நம் நாட்டில் ஒரே கல்லில் வடிக்கப்பெற்ற மிகப் பெரிய சிற்பங்களில் இந் நந்தியும் ஒன்று.

தஞ்சையில் சரபோஜி மன்னரால் உருவான சரசுவதி மகால் புகழ்மிக்க பழங்கால நூலகம். பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பனை ஓலைச் சுவடிகளும் தற்கால நூல்களும் இருக்கின்றன. அவற்றில் சில எங்குமே காணக் கிடைக்காத அருமையானவை.

இங்குள்ள கலைக்கூடம் வெண்கலச்சிலைகளுக்கும் கருங்கல் சிற்பங்களுக்கும் கருவூலமாகத் திகழ்கிறது. தஞ்சை மாவட்டம் தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்னும் பெருமையோடு இசை, நடனம், மிக நேர்த்தியான கைவினைப்பொருள்கள் பஞ்சலோகச் சிலைகள், வெண்கலத் தாமிரக் கலைப்பொருள்கள், தஞ்சாவூர்த் தட்டுகள், நெட்டி வேலைகள் முதலானவற்றுக்குப் பெயர் பெற்றது.

தஞ்சாவூருக்கு 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருவையாற்றில், ஆண்டுதோறும் சனவரித் திங்களில் நடைபெறும் தியாக பிரம்ம ஆராதனை விழா சிறப்பானதாகும்.

**வேளாங்கன்னி**

இங்குள்ள புகழ்பெற்ற கத்தோலிக்க தேவாலயம்ஆரோக்கிய மாதா வுக்காகக் கட்டப்பட்டது. இக்கோவிலுக்கு நாடு முழுவதிலிருந்து எல்லா மதத்தினரும் நாள்தோறும் வருகிறார்கள்.

**நாகூர்**

புகழ்பெற்ற இஸ்லாமிய யாத்திரைத் தலம் இது. ஆண்டுதோறும் நடைபெறும் கந்தூரிவிழா, திராளான மக்களை இங்கே ஈர்க்கிறது. இந்தப் புண்ணியத்தலத்துக்கு எல்லாச் சமயத்தவரும் வருகிறார்கள்.

**திருச்சிராப்பள்ளி**

காவிரிக் கரையில் அமைந்த பழமையான நகரம் திருச்சிராப்பள்ளி. இதன் வரலாற்றில் அற்புதமான அழிக்கமுடியாத அத்தியாயங்களைத் தீட்டியவர்கள் மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள்.

**மலைக்கோட்டை**

திருச்சியில் கம்பீரமாகக் காணப்படும் எண்பத்து மூன்று மீட்டர் உயரமுள்ள மலைக்கோட்டையின் உச்சிக்குச் செல்ல 431 படிகளை மலையிலேயே செதுக்கிச் செய்திருக்கிறார்கள். மலைக்கோட்டையின் உச்சியில் பிள்ளையார் கோவில் இருக்கிறது. இங்குள்ள வேறு இரண்டு குகைக் கோவில்களில் ஆறாவது ஏழாவது நூற்றாண்டுச் சிற்பங்கள் நிரம்ப உள்ளன.

**திருவரங்கம்**

காவிரி, கொள்ளிடம் ஆகிய நதிகளின் நடுவே காட்சிக்கு இனிய தீவாகத் திகழ்கிறது திருவரங்கம். 13-14 நூற்றாண்டு அளவில் கட்டப்பட்ட இங்குள்ள அரங்கநாதர் கோவில் மிகவும் புகழ்பெற்றது. இங்கே ஆண்டுதோறும் டிசம்பர் கடைசி வாரம் முதல் சனவரி இரண்டாம் வாரம் முடிய 21 நாட்களுக்கு வைகுந்த ஏகாதசி திருவிழா கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது.

### திருவானைக்காவல்

ஜம்பு என்பது புனிதமான நாவல் மரத்தின் பெயர். அதன் அடியில் சிவலிங்கம் தண்ணீரில் மூழ்கியிருக்கிறது. அதனால் திருவானைக்காவலுக்கு ஜம்புகேசுவரம் என்றும் பெயர். ஒரு காலத்தில் இங்குள்ள சிவலிங்கத்தை யானை ஒன்று வழிபட்டதாகப் புராணக் கதையும் உண்டு.

### கல்லணை

காவிரியின் குறுக்கே சோழ மாமன்னன் கரிகால் பெருவளத்தானால் இது எழுப்பப்பட்டுள்ளது.

அந்நாளையப் பொறியியல் கலை வளத்துக்கு இது இணையற்ற சான்றாகும்.

### சங்கத் தமிழ் வளர்த்த மாமதுரை

இரண்டாயிரத்து அறுநூறு ஆண்டுகட்கு முன்னரே கீழை நாடுகளின் ஏதன்ஸ் எனக் கிரேக்கத தலைநகரோடு ஒப்பிடத்தக்க புகழ் கொண்ட பெருநகர மதுரை. மிடுக்காக எழுந்து நிற்கும் மீனாட்சியம்மன் கோயிலுக்குப் பெயர் பெற்ற மாநகர் இது. வைகை நதிக்கரையில் மதுரை மாநகர் அழகுற அமைந்துள்ளது.

### மீனாட்சி சுந்தரேசுவரர் கோவில்

மதுரையின் மையத்தில் கவினுற அமைந்துள்ள இந்தக் கோவில் 263 மீட்டர் நீளமும் 247 மீட்டர் அகலமும் உள்ளது. இதன் நான்கு புறங்களிலும் உள்ள நான்கு உயர்ந்த கோபுரங்களிலும் வண்ணச் சித்திரச் சிற்பங்கள் கண்ணைப்பறிப்பனவாகும்.

இது ஓர் இரட்டைக் கோவில் ; ஒன்று தென்புறத்தில் உள்ள மீனாட்சி அம்மன் கோவில் - இன்னொன்று சுந்தரேசுவரர் கோவில். இங்குள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் கோவில் அருங்காட்சியகம் ஒன்று உள்ளது.

### கூடல் அழகர் கோவில்

மதுரை மாநகரின் மேற்குப்புறத்தில்



அமைந்துள்ளது. இங்கு ஒன்றின் மேல ஒன்றாக - உட்கார்ந்த நிலையிலும், நிற்கும் நிலையிலும், ஒயவாகச் சாய்ந்த நிலையிலும் பொருத்தியுள்ள திருமாலின் தோற்றங்கள் கோவிலின் தனிச் சிறப்பாகும்.

### திருமலை நாயக்கர் அரண்மனை

புகழ்பெற்ற திருமலை நாயக்க மன்னரால் 1636ல் இந்தோ அராபிய பாணியில் எழுப்பப் பெற்றுள்ள பிரமாண்டமான அரண்மனை இது. இங்கு ஒலி–ஒளிக்காட்சி சுற்றுலாத் துறையால் அமைக்கப்பட்டுள்ளது.

### திருப்பரங்குன்றம்

சுப்பிரமணிய சுவாமிக்கும் தெய்வயானைக்கும் இங்குத் திருமணம் நிகழ்ந்ததாகப் புராணக் கதையொன்று வழங்கி வருகிறது.

### திருச்செந்தூர்

நீலத்திரைக்கடல் ஓரத்திலே அமைந்துள்ள புகழ்மிக்க இங்குள்ள அருள்மிகு முருகக் கடவுளின் புண்ணியத்தலம் அறுபடை வீடுகளில் ஒன்று.

### கோயம்புத்தூர்

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்பெறும் கோயம்புத்தூரும் அதனைச் சுற்றியுள்ள இடங்களும் - கணக்கிலடங்கா நெசவாலைகளுக்கும், வேளாண்மை மற்றும் நெசவுத் தொழில்களுக்குரிய ஆராய்ச்சிகளுக்கும் கேந்திரப் பகுதிகளாகும். பொறியியல் கருவிகள், நெசவாலைக் கருவிகள் உற்பத்திக்கும் இது முன்னணியில் நிற்கிறது. அருகில் பேரூரில் உள்ள சிவன் கோவிலும் மருதமலையில் உள்ள முருகன் திருக்கோவிலும் கண்டுகளிக்கத்தக்கவை. இம் மாவட்டத்திலுள்ள பவானி அணைக்கட்டு பார்க்கத்தக்க ஓர் அழகிய சுற்றுலா இடம் ஆகும்.

### காட்டு வளம் காண வாரீர்

தமிழ்நாட்டில் எண்ணற்ற

வெப்பமண்டலக் குறுங்காடுகளும் பெரும்புதர்களும் உள்ளன. அவற்றில் வகைவகையான தாவர இனங்களையும், விலங்கினங்களையும் காணலாம்.

**மான்கள் பூங்கா, கிண்டி**

புதர்கள் மண்டிய பசுமை கொஞ்சும் பூங்காவாகும் இது. சென்னை நகர எல்லைக்குள் தெற்கு வெப்ப மண்டலப் பகுதிக்குள் அமைந்துள்ள இதில், முப்பதுக்கும் மேற்பட்ட மரவகைகள் உள்ளன. விரைந்து அழிந்துவரும் இந்தியக் கருப்பு நிறக்கலைமான் இனத்தைச் சார்ந்த கணக்கற்ற மான்களுக்கு இங்கே காப்பு வெளி அமைக்கப்பட்டுள்ளது.

**பாம்புப் பண்ணை, கிண்டி**

விதவிதமான பாம்புகளையெல்லாம் இந்தப் பண்ணையில் பார்க்கலாம்.

**முதலைப் பண்ணை**

சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில், மாமல்லபுரம் செல்லும் சாலையில், கோவளத்தை அடுத்து இந்த முதலைப் பண்ணையைக் காணலாம். மாநில அரசின் துணையோடும், உலகக் காட்டு விலங்கு நிதி உதவியோடும் இது இயற்கைச் சூழலில் நிறுவப்பட்டுள்ளது.

**வேடந்தாங்கல்**

இந்தியாவில் உள்ள மிகப் பெரிய நீர்ப் பறவைப் புகலிடங்களில் வேடந்தாங்கலும் ஒன்று. இது சென்னைக்குத் தெற்கே 85 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்குள்ள ஏரியில் நெடிய கால்களைக் கொண்ட நாரைகளின் கூட்டத்தைக் காண்பது தென்னிந்தியாவில் வேறு எங்குமே இல்லாத வியக்கத்தக்க காட்சியாகும். அக்டோபர் முதல் மார்ச்சு வரையிலான ஆறு மாதங்களில் பருவ நிலைக்கேற்ப எண்ணற்ற நீர்க்கோழிகள் அங்கே நீந்தித் திளைக்கின்றன. ஆண்டுதோறும் இருபதாயிரம் முதல் முப்பதாயிரம் பறவைகள் வரை இங்கே வருகின்றன எனக்



கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

**முதுமலை**

தமிழகத்திலேயே மிகப் பெரிய வனவிலங்குப் புகலிடங்களில் ஒன்றான முதுமலைக்காடு, நீலகிரி மலையில் உள்ளது. உதகமண்டலத்திலிருந்து மைசூர் செல்லும் வழியில் 60 கிலோ மீட்டர் தூரத்தில் இது இருக்கிறது. இங்கே ஒரே சமயத்தில் நானூறுக்கும் மேற்பட்ட புள்ளிமான்கள் கூட்டமும், ஏறத்தாழ 20-30 இந்தியக் காட்டெருமைகள் கூட்டமாகச் செல்வதும் காண்பதற்கரிய காட்சியாகும்.

புலிகள், சிறுத்தைகள், குள்ளநரிகள், கழுதைப்புலிகள், புனுகுப்பூனைகள் முதலானவற்றுக்கும் இது வசதியான உறைவிடம். சாம்பர் என்னும் மான் வகைகள், நான்கு கொம்புகள் உடைய கருப்பு மான்கள், மருண்டோடும் புள்ளி மான்கள், மிகப் பெரிய அணில்கள், குலைக்கும் மான்கள், நீலகிரி ஐபெக்ஸ் எனப்படும் மலை ஆடுகள் அடர்ந்த குரங்குகள் இப்படி விந்தையான விலங்குக் கூட்டத்தையும் இங்கே நாம் காணலாம்.


**ஆனைமலை**

கோவை மாவட்டத்தில் உள்ள ஆனைமலைக்காடு வகைவகையான தாவரச் செடி, கொடி, மரங்களுக்குப் பெயர் பெற்ற இடம். காட்டு எருமைகள், யானைகள், புலிகள், சிறுத்தைகள், கரடிகள், காட்டுப் பன்றிகள், மான்கள், காட்டு நாய்கள், முள்ளம் பன்றிகள், கருமுயல்கள், பறக்கும் அணில்கள், குள்ளநரிகள், புனுகுப் பூனைகள் முதலான கணக்கில் அடங்காத விலங்கினங்களையெல்லாம் இங்கே காணலாம்.

**ஓய்விற்குகந்த குறிஞ்சி நகரங்கள்**

**உதகமண்டலம்**

இயற்கை எழிலின் இன்பமெல்லாம் ஊட்டுவதாலோ என்னவோ ஊட்டி என்று சிறப்பாக



அழைக்கப்படும் உதகமண்டலம் மலைத் தலங்கள் அத்தனைக்கும் பேரரசியாக விளங்குகிறது. இங்குள்ள 2,633 மீட்டர்கள் உயரம் கொண்ட 'தொட்டபெட்டா' மலையேறிகளுக்கு உவகைக் கிளர்ச்சியூட்டும் அருமையான உல்லாசத் தலம். எழில் மலர்கள் கொஞ்சும் தாவரத் தோட்டங்கள், படகுச் சவாரிக்கேற்ற உல்லாச ஏரி, வேளாண்மை வளர்ச்சித் திட்டம், பசுமை கொழிக்கும் தேயிலைத் தோட்டங்கள் இவையெல்லாம் - இந்தியாவில் என்றுமே பசுமை எழில் குன்றாத மலைத் தலங்களில் ஒன்றாக உதகமண்டலத்தை ஒளிவீசச் செய்கின்றன.

இந்நகரை அடுத்து இன்னும் இரண்டு சிறிய மலைத்தலங்கள் உள்ளன. ஒன்று குன்னூர், இன்னொன்று கோத்தகிரி. சிம்ஸ் பூங்கா, லேம்ஸ் பாறை, கேனிங் சீமாட்டி மேடை, டால்பின்ஸ்மூக்கு, ராலைய்யா அணை, லாஸ் அருவி இவையெல்லாம் குன்னூரின் அழகுக் கவர்ச்சிக்கு மெருகு சேர்ப்பவை.

கோத்தகிரியில் கொடநாடு காட்சி முனை, செயிண்ட் கேதரின் அருவி, அரங்கசாமி கல்தூண் மற்றும் கற்பாறை ஆகியவை காணத் தகுந்த இடங்கள். பொதுவாக, நீலகிரி மலைத் தொடர் காபி, தேயிலை, உருளைக் கிழங்கு தோட்டங்களுக்குப் பெயர் பெற்றதாகும். இங்கே தோதர்கள், கோதர்கள், குரும்பர்கள், படகர்கள், பனியாக்கள் ஆகிய பழங்குடி மக்கள் தொன்மைச் சிறப்புள்ள குடும்பத்தினராக வாழ்ந்து வருகின்றனர்.

**கொடைக்கானல்**

மயக்கும் அழகு கொஞ்சும் இந்த மலைத்தலம், கடல் மட்டத்திலிருந்து 2,133 மீட்டர் உயரத்தில் உள்ளது. பிணியகற்றும் பெருமருந்தாகப் பருவ நிலையும் பொருந்தியுள்ள (கோடையில் உச்ச வெப்பம் 19.8 டிகிரி சென்டிகிரேடு குறைந்த வெப்பம் 11.3 சென்டிகிரேடு) இந்த மிடுக்கான மலை நகரில் பகற்பொழுதில் அதிக நேரம் கதிரவனின் ஒளிக்கதிர்கள் பொன்முலாம் பூசுகின்றன. படகு விளையாட்டுப் பந்தயக்காரர்கள் சிந்தை மகிழும் வண்ணம், அணி அணியாகப் படகுகள் பாயும் அழகான ஏரியும் நட்சத்திர வடிவில் காட்சி தருகிறது. பிரியன்ட் பூங்கா, பாறைத் தூண்கள், பெருமாள்குன்று, வெள்ளி நீர் வீழ்ச்சி, கரடிச் சோலை அருவி போன்றவையும், செண்பகனூர் புனித இருதயக் கல்லூரியில் உள்ள தாவர மற்றும் விலங்குப் பொருட்காட்சியும் கொடைக்கானலை நோக்கி நம் உள்ளத்தைக் கொள்ளையிட்டுச் செல்வனவாகும்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பூக்கும் குறிஞ்சி மலர்கள் இவையெல்லாம் சேர்ந்து கொடைக்கானலை இயற்கை அன்னையின் எழில் கூடமாகவே மாற்றி விட்டிருக்கின்றன.

**ஏர்க்காடு**

அமைதி தவழும் ஓய்வுக்கு உகந்த உல்லாச மலைத்தலம் ஏர்க்காடு.

சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலைத் தொடரில் பசுமையும், குளிர்ச்சியும் கொண்டு இது அமைந்துள்ளது.

**மனங்கவர் கடற்கரைகள் கடலோர ஓய்விடங்கள்**

**கோவளம்**

மாமல்லபுரம் செல்லும் வழியில் ஓய்வுக்கு உகந்த ஊர் இது. அழகிய கடற்கரை ஓட்டல் ஒன்று இங்கே உருவெடுத்துள்ளது.

**மாமல்லபுரம்**

தொன்மைச் சிறப்புமிக்க இந்தக் கடற்கரைப் பட்டினம் சென்னைக்குத் தெற்கே 60 கி.மீ. தொலைவிலுள்ளது. கி.பி.600 முதல் 750 வரை தழைத்துச் செழித்த பல்லவர் காலத்து

உளிகள் எவ்வாறெல்லாம் கற்களுக்கு உயிரூட்டிச் சிரிக்கும் சிற்பங்களைச் செதுக்கியுள்ளன என்பதை இங்குள்ள பாறைக் கோவில்கள் பறைசாற்றுகின்றன. மாமல்லபுரம் இன்று கடற்கரை ஓய்விடமாகவும், புகழ்மிக்க சுற்றுலாத் தலமாகவும் பெயர் பெற்று விளங்குகிறது.

**குடவரைக் கோவில்கள்**

மாமல்லபுரத்தில் உள்ள ஒன்பது குடவரைக் கோவில்களில், கிருஷ்ண மண்டபம் காட்சி எழிலுக்குப் பெயர் பெற்றது ஆகும். மகிஷாசுரமர்த்திணிக் குகையின் ஒருபுறத்தில் மகாவிஷ்ணு கம்பீரமான கோலத்துடன் (அனந்த சயனமாகப்) பள்ளி கொண்டிருப்பதைப் பார்க்கலாம். மறுபுறத்தில் எருதுத் தலையுள்ள அசுரர்களாடு காளிதேவி போராடுவதைக் காணலாம்.

**கடற்கரைக் கோவில்**

கடல், புயல், வெயில், காலச்சுழல் இவற்றின் தாக்குதல்களுக்கெல்லாம் தப்பித் தலைநிமிர்ந்து நிற்கிறது இந்தத் தொன்மையான கற்கோவில்.

**அர்ச்சுனன் தபசு சிற்பப் பாறை**

உலகிலேயே மிக நீளமாக மிக நேர்த்தியாகச் செதுக்கப்பட்ட கற்பாறைக் கலைப் பெட்டகம் இது. திமிங்கிலத்தின் முதுகு வடிவில் அமைந்த பாறையில் செதுக்கப்பட்டுள்ள இந்தச் சிற்பங்கள், இடையிலே பிளவு கொண்டதாகக் கடலை நோக்கி நிற்கிறது.



**ஐந்து ரதங்கள்**

மாமல்லபுரத்தில் குகைக் கோவில்களுக்குத் தெற்கே இந்த ஐந்து இரதங்கள் அமைந்துள்ளன. இவை ஐந்தும் ஒரே பறையில் செதுக்கப்பட்ட சிறப்புக் கொண்டவை. இவை பஞ்ச பாண்டவர் இரதங்கள் என வழங்கப்படுகின்றன.

**இராமேசுவரம்**

இந்தியாவின் மிகப் புனிதமான மிகப் பெரிய யாத்திரைத் தலங்களில் இராமேசுவரம் ஒன்று. இது இராமாயண இதிகாசக் கதையை ஒட்டி எழுந்த கோவிலைக் கொண்டது. இக்கோவிலில் வேறெங்கும் காண முடியாத வியப்புக்குரிய மிக நீளமான உள்மண்டபப் பிரகாரம் உள்ளது.

**கன்னியாகுமரி**

இந்தியாவின் தென்கோடி முனையில் கன்னியாகுமரி இருக்கிறது. முக்கடல் முத்தமிட்டுத் தாலாட்டும் கன்னியாகுமரிக்குள்ள மாபெரும் மாட்சி, அங்கு நாம் காணும் கதிரவன் கடலில் மறையும் காட்சியாகும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே முழுநிலவு நாளில் சூரியனின் மறைவும் நிலவின் உதயமும் ஒரே நேரத்தில் நிகழும் அற்புதமான காட்சியைக் காணக்கூடிய ஒரே இடம் கன்னியாகுமரிதான். பனை ஓலைகளால் செய்யப்படும் பொருட்களுக்கும், சங்கு மாலைகளுக்கும் இப்பகுதி பெயர்பெற்றது ஆகும்.

**கன்னியாகுமரி அம்மன்**

கன்னித் தெய்வமான கன்னியாகுமரிக்கு இங்கே அழகிய ஆலயம் ஒன்று உள்ளது. பெரும்பாலோரால் இந்தியாவுக்கே விழிப்பு மிக்க காவல் தெய்வமாகக் கருதப்படுகிறாள் குமரி அன்னை.

**காந்தி நினைவு மண்டபம்**

இந்தியாவின் தந்தை காந்தியடிகளின் அஸ்தி கடலில் கரைக்கப்படுவதற்கு முன்னால், எங்கே பொதுமக்களின்

பார்வைக்காக வைக்கப்பட்டிருந்ததோ, அங்கே- அதே இடத்தில் இந்த மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

**விவேகானந்தர் நினைவுப் பாறை**

கன்னியாகுமரி கோவிலுக்குத் தென்கிழக்காக, கடலில் இரு பாறைகள் உள்ளன. அவற்றில் ஒரு குன்றின்மீது அமர்ந்து, இந்து சமயத்தின் சங்கநாதமாக முழங்கி வந்த விவேகானந்தர், சில நாட்கள் ஆழ்ந்த தியானத்தில் மூழ்கியிருந்தார். 1970-ல் அவரது நினைவாக ஒரு மண்டபம் இங்கே எழுப்பப்பட்டுள்ளது இந்தியாவின் கட்டடக் கலை எழில்கள் அத்தனையின் முழுமையான கலவையாக இது ஒளிர்கிறது.


**இசை பாடும் எழில் அருவிகள்**

**குற்றாலம்**

தீராத நோயெல்லாம் தீர்த்துவைக்கும் மூலிகைகளின் தாயகமாக விளங்கும் குற்றால மலை அருவி உடலுக்கு நலம் தருகிறது. வெள்ளியே உருகி விழுத்தாற்போல் அங்கு விழும் நீர் வீழ்ச்சியில் நீராடுவதே பேரின்பம். ஜூன் முதல் செப்டம்பர் வரை இங்கே பக்குவமான பருவநிலை ஆகும்.

**ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி**

பாய்ந்து விழும் நீர்வீழ்ச்சியால் மேவி எழும் நீர்த்திவலைகள் புகைப்படலம் போன்ற எழில் தோற்றம் தருகின்றன. அதனாலேயே 'ஒகேனக்கல்' என்ற பெயர் இதற்கு வந்துள்ளது. விரைந்து கொட்டும் நீர்வீழ்ச்சி, அடர்ந்து செறிந்த மரக்காடுகள், பசுமை கொழிக்கும் இயற்கை எழில்கள் ஆகியவற்றின் அழகுச் சோலையான ஒகேனக்கல் விடுமுறையைக் கழிக்க ஏற்ற இடம் இது.




**காண்போர் வியக்கும் கைவினைப் பொருட்கள்**


கலை நுட்பம் வாய்ந்த கைத்திறனுக்கு எடுத்துக்காட்டாகத் தனித்தன்மையுடனும், சிறப்பு அம்சங்களுடனும் புத்தம்புது வகைகளில் உருவாகும் தமிழ்நாட்டுக் கைவினைப் பொருட்கள் உலகம் முழுவதும் புகழ்பெற்றுத் திகழ்கின்றன. தறியிலே நெய்யப்படும் புடவையும் சரி, சக்கரத்தில் வனையப்படும் மண் பானையும் சரி; கலைமுத்திரை பதிந்த கவினழகுச் சின்னங்களாகவே உருவாகின்றன. நெடுங்காலமாகவே தமிழ்நாட்டில் கோவில்கள் சமய, சமுதாய அமைப்பின் மையமாக விளங்கி வந்திருக்கின்றன. வண்ணத் துணிகள், மெல்லிய நெட்டி மாலைகள், நேர்த்திமிக்க உலோகச் சிலைகள் - ஒவ்வொன்றும் கலை எழில்மிக்க கைவினைப் பொருட்களாம். சிவன் - பார்வதி வெண்கல விக்கிரகங்கள், நடராசர் சிலை, திருமால், இலட்சுமி சிலைகள் ஆகியவை நுட்பம் செறிந்த கைவினைத் தொழிலுக்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட கலைஞர்களின் அருமையான அழகுப் படைப்புகளாகும். பனை ஓலைகள், கோரைப் புற்கள், போன்றவற்றால் செய்யப்படும் விளக்குக் குல்லாய்கள், பூக்கூடைகள், கைப்பைகள் முதலான பயன்படு பின்னல் பொருட்களை அழகுறப் படைப்பதிலும் தமிழ்நாட்டுக் கைவினைஞர்கள் தலைசிறந்து விளங்குகிறார்கள். காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், கோயம்புத்தூர், மதுரை முதலான இடங்களில் காந்தம் போல் கவர்ந்திழுக்கும் எழில் வடிவங்களில்,பட்டிலும் பஞ்சிலும் பாங்காக நெய்யப்படும் வண்ணப் புடவைகள் கண்ணைப் பறிப்பவையாகும்.

இவ்வாறு இதயம் கவரும் சுற்றுலாத் தலங்கள் தமிழ்நாட்டில் இவைமட்டுமல்ல; இன்னும் பல உண்டு; இவை அவற்றுள் குறிப்பிடத்தக்க சில!

★★★



# சோறு



**விழி. பா. இதயவேந்தன்**

அம்மா சின்ன வயதில் எங்களை எப்படியெல்லாம் கவனித் தார்கள் என்று நினைத்தால் இன்ன மும் அதிர்ச்சியாய்த்தான் இருக்கிறது. ஏழ்மை வாழ்விலும் ஒரு முன் னேற்றம். கேட்கும் பொருளையோ தின்பண்டங்களையோ தவறாமல் வேலையை விட்டு வரும்போது வாங்கிவருவார்கள்.

அம்மாவின் வருகைக்காகவே நானும் தங்கையும் விசேஷமாய் காத்திருப்போம். வரும் சமயத்தை அறிந்து நின்றுகொண்டே தூரத்தில் கண்களால் துழாவுவோம். அம்மா வின் பொட்டு பூவில்லாத தோற்ற மும் எண்ணெய் இல்லாத தலையும் மங்கிய நகராட்சிப் புடவையும், மற்றவர்களைக் காட்டிலும் தனித் துக் காட்டிக் கொடுக்கும். மடியில் கனத்து முடுக்காய் இருக்கிறதா எனத் துருவிப் பார்ப்போம்.

அப்படி இருந்தால் என்னைக் காட்டிலும் தங்கைக்கு அதிக மகிழ்ச்சி. பூமியிலிருந்து கைகளைத் தட்டிக் கொண்டு அம்மா கிட்ட நெருங்க நெருங்க எகிறித் தவிப்பாள். கண்களில் ஒருவித ஒளிமின்னல் கீற்றுக்களாய்ப் படரும்.

நோயும் படுக்கையுமாய்க் கிடந்த அப்பாவைக் குணப்படுத்த அம்மா எவ்வளவோ செலவு செய்தும் தீர்க்க முடியவில்லை. அக்கடா வென்று விட்டுவிட்டாள். தன் சக்திக்கு மீறி பெரிய பெரிய ஆஸ்பத்திரிக்கு என்று கூப்பிட்டுப் போக முடியவில்லை. எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் அம்மா பொட்டு வைத்து பூவைத்துப் பார்த்த தில்லை.

நகரில் கடைவீதியில் சினிமா கொட்டகையில், பஸ் நிலையத்தில், இரயில் நிலையத்தில் இப்படி எங்கும் பெண்கள் எப்படியெல்லாம் சீவி சிங்காரிச்சுப் போகிறார்கள். அம்மாவிற்கு வசதிகளும் வாய்ப்பு களும் இல்லாவிட்டாலும் சாதார ணமாய் எண்ணெய் தடவி கூடத் தலையை முடிந்துகொள்ள அக்கறை யில்லாமல்போனது. அம்மா வாகவே அப்படியே வளைத்து சுருட்டிக்கொள்வாள். முடிகள் கறுத்தும் பழுத்தும் இருக்கும்.

எனக்கும் தங்கைக்கும் என்று எண்ணெய் வாங்கி வைத்திருப் பாள். தங்கை தடவிவிட்டாலும் மிரட்டி மறுப்பாள். அவளுக்கென்று சொந்த விருப்பங்கள் என்று எதை யும் செய்து கொண்டதாய் நான் பார்த்தில்லை.

காலையில் அய்ந்து மணிக்கு எழுந்து ஓடுவாள். ஆறு மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் துப்புரவு மேஸ்திரியிடம் வருகைப் பதிவேட் டில் கைரேகை வைத்துவிட்டு வேலை செய்யும் தெருவிற்குப் போவாள். சின்னதும் பெரிதுமாய் ரெண்டு வாளியில் தட்டு கரண்டி யைப் போட்டுக்கொண்டு பீ வண்டியைத் தள்ளிக்கொண்டு வருவாள்.

மருதூர் பக்கம்தான் அவள் வேலை செய்யும் தெரு.

புடவையைத் தூக்கி இடுப்பில் சொருகிக் கொண்டு பீ வண்டியைத் தெருவில் நிறுத்திவிட்டு வீட்டுக்குத் தகுந்த மாதிரி வாளி கரண்டியுடன் கக்கூசுக்கு மலம் அள்ளப் போவாள். ஒன்றிரண்டு வீடாய் இருந்தால் சின்னவாளி; அய்ந்தாறு குடித்தனம் இருந்தால் பெரியவாளி. வீட்டுக்கு வீடு வாரி வந்து பீ வண்டியில் கொட்டுவாள். பனியோ, காற்றோ, மழையோ, வெயிலோ சிட்டாய்ப் பறப்பாள்.

மருதூர் பகுதியில் அம்மா வேலை செய்கிறாள் என்றுதான் பெயர். சமயத்தில் அவசர ஆத்திரத் திற்கு அம்மாவைத் தேடிப் பிடிக்க முடியாது.

ஒரு சமயம் அப்படித்தான் தங்கராசு மாமா செத்துப் போய்விட்டாரென்று வாடகை சைக்கிளை எடுத்துக் கொண்டு ஓடிவந்தேன். அம்மா வேலை செய்யும் இடமெல்லாம் தேடினேன். இரண்டொரு தெருவில் தண்ணி அடித்துக்கொண்டிருந்த பொம்பளையிடம் விசாரித்தேன்.

என்கிறாள். இது அம்மாவின் அடிமைச் சின்னம். அம்மாவி லிருந்து தலைமுறைக்கும் தொடரும். அப்டீதான் அவுங்க பேசுவாங்க. நான் சுதாரித்துக் கொண்டேன்.



"ஏங்க `எங்க அம்மாவைப் பாத்தீங்களா?"

"யாருப்பா உங்கம்மா?"

"பாக்கியம்."

"பாக்கியமா, எந்த பாக்கியம்?"

"அதாண்டி கக்கூஸ்காரி பாக்கியம்."

பக்கத்தில் சில்வர் தவலையுடன் நின்றிருந்தவள் உசுப்பினாள். இவள் என்னை ஏற இறங்கப் பார்த்தாள். ஏன் அப்படிப் பார்க்கிறாள் என்று எனக்குக் கேட்க வேண்டும் போலி ருந்தது. சட்டை கிழிந்திருந்தாலும் தைத்துத் துவைத்துப் போட்டிருந் தேன். தலையில் எண்ணெய் தேய்த்து அப்பா கற்றுக்கொடுத்த மாதிரி இடது பக்கம் வகிடெடுத்து வலது பக்கம் தூக்கி வாரி யிருந்தேன்.

"கக்கூஸ்காரி மவனா நீ ?"

'ஏன் பாக்கியம் மவனா நீ என்று கேட்கக்கூடாது?' என் மனம் சஞ்சலப்பட்டது.

"வந்து எடுத்துட்டுப் போயிட்டா, அந்தத் தெருவுல போய்ப்பாரு"

நான் நகர்ந்தேன்.

"படிக்கிறயாடா?"

மரியாதை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக ஆகிப் போனது. வந்தபோது 'யாருப்பா' என்றவள் போகும்போது 'டா'

"ம்".

"என்ன படிக்கிறடா?"

"எஸ்.எஸ்.எல்.சி."

நான் தொடர்ந்து பேச்சுக்கொடுக் காமல் நகர்ந்தேன். திருவள்ளுவர் தெரு, குப்புசாமி தெரு, பாரதியார் தெரு, மாரியம்மன் கோயில் தெரு என்று சுற்றினேன். கடைசியில் கோடித் தெருவில்தான் அம்மா வைப் பிடித்தேன். வெய்யில் உச்சிக்கு எட்டியிருந்தது. அகோர மாய் மண்டையைப் பிளக்கும் அளவிற்கு உஷ்ணம். அம்மாவைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. உதடுகள் காய்ந்திருந்தது. உடல் முழுக்க வியர்வையால் நனைந்து விட்டது. வாளியைப் போட்ட கையோடு இடுப்பிலிருந்த வெற்றிலைப் பாக்குப் பையை எடுத்துப் பிரித்தாள். ஒரு பாக்கை எடுத்து மென்றாள். அரை வெற்றிலையைக் கிழித்தெடுத்து லேசாய் சுண்ணாம்பு தடவி திணித்தாள்.

"ஏம்பா பள்ளிக்கொடம் போவலயா?"

"இல்லம்மா,"

"ஏன் போவுல, ங்கொப்பா திட்டியிருப்பாரே.?,"

"தங்கராசு மாமா செத்துருச்சு; அப்பா கூப்டாரச் சொன்னாரு."

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

**(தொடர்ச்சி பக்கம் 33)**

# தமிழில் மருத்துவச் சீட்டு

## முதல்வரின் வாழ்த்துச் செய்தி

மொழி என்பது வெறும் தகவல் பரிமாற்றுச் சாதனம் மட்டுமல்ல; அதற்கப்பாலும் செல்கிற மென்மையான இழையாக அது விளங்குகிறது. உதடுகளிலிருந்து உற்பத்தியாவது போலத் தோன்றினாலும், இதயங்களை இணைக்கிற கண்ணுக்கு அகப்படாத பாலமாய் அது விளங்குகிறது.

பரிச்சயமான மொழியில்தான் தகவல் பரிமாற்றம் நடக்கவேண்டும் என்று ஒரு சாரார் அயல்மொழியை ஆதரித்து வருகின்றனர். உபயோகம் அதிகரிக்கும்போது பரிச்சயமும் கூடுகிறது என்பதுதான் உண்மை.

தமிழ், உள்ளம் குளிர செவியின் ஊடாகப் பாய்ந்து இன்பம் விளைவிக்கும் இலக்கிய விருந்துக்கு மட்டும் பயன்படுவதாக இல்லாமல், உடலிலும் ஊடுருவிப் பிணி அகற்றும் மருந்துக்கும் பயன்படுவதாக மாற்றிக் காட்டும் மகத்தான பணியை மக்கள் நல்வாழ்வுத் துறை செய்திருப்பது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

தமிழிலே நோயின் தன்மை அறியப் பெற்றால் பெரிய நோய்கூட சாதாரணமாகத் தோன்றுகிறது. ஆங்கிலத்திலே வயிற்றுப் போக்கைக்கூட கேட்க நேரிடுகிற போது 'என்ன நோயோ' என்று அச்சம் தோன்றுகிறது. தமிழ் எழுத்துக்களின் அமைப்பு அதை ஆங்கிலத்தைப் போல அதிகமாய்க் கிறுக்கி எழுத முடியாத தனித்தன்மை பெற்றிருக்கிறது. கிறுக்கி எழுத எத்தனைப் பயிற்சி பெற்றாலும் முடியாத அளவிற்கு வடிவமைப்பைப் பெற்றிருக்கிறது. மக்கள் நல்வாழ்வுத்துறை புற நோயாளர் மருத்துவச் சீட்டு, தமிழிலேயே தயாரித்திருப்பது பெருமைக்குரிய ஒன்றாய் இருக்கிறது. மருத்துச் சீட்டின் நெற்றியிலே சுகாதாரக் குறிப்புகளையும், அதன் தாடையில் மருத்துவப் பொன்மொழிகளையும் வெளியிட்டு வாசிப்பவர் இதயத்தில் ஆழமாய்ச் சில விதைகளை விதைக்கும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. சில செய்திகள் திரும்பத் திரும்பச் சொன்னால்தான் வசிக்கின்ற வீட்டிற்கு வழித்தடம் போல நினைவில் நிற்கும் என்பது சுகாதாரத் துறைக்கு மிகவும் பொருத்தமாய் இருக்கிறது. தண்ணீரைக் காய்ச்சிக் குடிக்கவும், காலையிலும் இரவிலும் பல் துலக்கவும், காலம் காலமாகச் சொல்லி வந்தாலும், இந்த எச்சரிக்கை இன்னும் சரியாக உச்சரிக்கப்படாத காரணத்தினால் பலர் நோய்வாய்ப்பட்டுத் தொல்லையுறுகிறார்கள்.

சுகாதாரக் குறிப்புகளை ஏழைகளின் இல்லத்திற்கு எடுத்துச் செல்வதோடு அவர்தம் இதயத்திலும் இடம் பெறச் செய்வது இன்றியமையாதது.

சொட்டு மருந்து குறித்தும், தடுப்பூசி பற்றியும், கர்ப்பிணித் தாய்மார்க்கு இரும்பு மாத்திரை பற்றியும் இன்னும் அதிகமாய் எடுத்துச் சொல்லவேண்டிய கடமை நமக்கிருக்கிறது.

தமிழகத்தில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் தடுப்பூசி அட்டவணைப்படி பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது எனும்



நிலையை அடையும் போதுதான் நாம் முழுமையான மகிழ்ச்சியடைய முடியும்.

அயோடின் உப்பு குறித்தும், சத்து நிறைந்த கீரை உண்பதையும் குடும்ப நலம் பேணுவதையும் இவர்கள் உள்ளத்தின் ஓரத்தில் ஒட்ட வைப்பதோடு நிற்காமல், அவர்கள் கடைப்பிடித்து வளம் பெறவும் செய்ய வேண்டும்.

மருந்துச் சீட்டில் இவற்றையெல்லாம் குறிப்பிடுவது மக்கள் நல்வாழ்வை மலரச் செய்கிற இன்னொரு முயற்சியாய் இருக்கும் என நான் நம்புகிறேன்.

நோய் விவரமும், மருந்து விவரமும் சரியாகத் தெரியாமல், கொடுக்கிற மருந்தையும் சரியாக உட்கொள்ளாத நோயாளிகளும் இருக்கிறார்கள்.

மருத்துவர்கள் தருகிற மருந்தோடு அவர்தம் அன்பும், அனுசரணையான அணுகுமுறையும் கலக்கும்போதுதான் அது துரிதமாக வேலை செய்கிறது. மருந்து என்பது இரசாயனக் கலவை மட்டும் அல்ல; கனிவும் கலந்து நடத்துகிற இரகசியமான இரசவாதம் என்பதையுணர்ந்து, இன்னல் தீர்க்கிற இத்துறையில் இருப்பவர்கள் செயல்பட வேண்டும். புன்னகையால் புண்ணை ஆற்றிவிட முடியாது; ஆனால் அது காயத்தின் கடுமையைக் கட்டாயம் மறக்கச் செய்யும்.

தமிழில் மருத்துவச் சீட்டு என்றால் மருந்தின் பெயர்களைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதுவதாகத் தவறாக எண்ண வேண்டியதில்லை; தமிழ் எழுத்துகளில் அந்த மருந்தின் பெயரை அப்படியே எழுதுவதைத் தான் நல்வாழ்வுத் துறை செய்திருக்கிறது; அதுதான் பயன்பாட்டை அதிகரிக்கும். 'Crocin' என்கிற மாத்திரையை ஆங்கிலத்தில் குறிப்பிடுவதோடு 'குரோசின்' எனத் தமிழிலும் குறிப்பிடும்போது ஆங்கிலம் தெரியாதவர்களும் அதை வாசித்தறிய வழிவகுக்கும்.

இந்த மருத்துவச் சீட்டு, அரசு மருத்துவமனைகளையே நம்பி வாழ்கிற வறுமையின் பிடியில் இருப்பவர்களுக்கு ஒரு உயர்ந்த சாதனமாக விளங்குகிறது. அரசுத் துறையில் ஆரம்பிக்கிற இந்த முயற்சி தனியார் மருத்துவமனைகளிலும் விரைவில் பரவ வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இந்த முயற்சிக்கு முதல் வித்து தூவிய மக்கள் நல்வாழ்வுத்துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


★ முதல்வர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு...

★ வெள்ளிவிழா ஆண்டைக்கடந்து, உள்ளம் கொள்ளை கொள்ளும் விதத்தில்...

★ இலக்கியப் பயணம் தொடர்ந்திடும்

**தமிழரசு**

**இலக்கிய மலர்**

★ வரும் தமிழ்ப் புத்தாண்டையொட்டி ஏப்ரல் 14-ஆம் நாளன்று, கண்ணையும் கருத்தையும் கவரும் விதத்தில் வண்ணமுற மலரவிருக்கிறது!

★ இணையற்ற இலக்கிய மேதைகள், கனிநிகர் கவிதை தரும் கவிஞர்கள், இதயம் தொடும் எழுத்துச் சிற்பிகளாம் எழுத்தாளர்கள், கண்வழி புகுந்து கருத்தினைக் கிளரும் ஓவிய விற்பன்னர்கள்...

★ - எல்லோரும் பங்கேற்பதாக, தமிழ் இலக்கிய வரலாற்றின் தனிச் சாட்சியாக....

★ - இன்றைய தமிழ் இலக்கிய வளர்ச்சிகளையும், இலக்குகளையும் பதிவு செய்வதாகப் புதிய மெருகோடு வெளிவரும்! கற்கண்டுச் சுவைதரும்!

**200க்கும் மேலான பக்கங்கள்**

# ஜப்பான் நாட்டுக் காதல் கவிதைகள்!

தமிழில்: ந. முத்துக்குமார்

அவள் கனவுகளுக்கு
என்னைக் கொடுப்பேன்;
என்னருகில்
அவள் உறங்குகையில்
அவளது பாடலை
அவள் காதில் மெல்ல உச்சரிப்பேன்!

எதுவும் பேசாதே,
எதுவும் நினைக்காதே,
பெயர், விதி எதைப்பற்றியும்
வேண்டாம் கேள்விகள்;
இங்கு
நீயும் நானும்
ஒருவரை ஒருவர்
பார்த்தபடி இருப்போம்!

அவனை
நினைத்து உறங்கினேன்;
அப்புறம் அவன் வந்தான்!
ச்சே,
கனவென்று தெரிந்திருந்தால்
விழித்திருக்கவே மாட்டேன்!

என்னைக் காதலி
இக்கணத்தில்
உலகின் உன்னத
மனிதராவோம்!

கடல் பூண்டுக்காக
அடிக்கடி வருபவன் அவன்;
அவனுக்கா தெரியாது
அலைமோதுகிற
பாறையில் படிந்த
பாசி அல்ல
நானென்று!

அவனது இசைக்குறிப்பு
அற்புதமானது
என் மார்புக்குள்ளிருந்து
வரும் ஒலி அது!



விழித்தெழுந்து
சுற்றுப்புறத்தைக்
கைகளால் தடவுகிறேன்;
என்னைச் சந்திக்க
கனவில் வராதே!



# நல்ல திரைப்படம்

- ஞான ராஜசேகரன், இ.ஆ.ப.

திரைப்படம் என்பது ஒரு பொழுது போக்கு மட்டுமல்ல; பொழுதுபோக்கிற்குப் பெரிதாக ரசனை ஒன்றும் தேவையில்லை - திரைப்படம் ஒரு கலை வடிவம். அதை வியாபாரிகள் எவ்வளவு மலினப்படுத்தி விற்றுக் கொண்டிருந்தாலும், அடிப்படையில் திரைப்படம் ஒரு கலை வடிவம்தான்.

ஒரு சராசரி தமிழனின் வாழ்க்கையில் சினிமா எத்தகைய பங்கு வகிக்கின்றது என்பது, நான் சொல்லி உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை. என்னுடைய வெளிமாநில நண்பர் ஒருவர் சொல்வார்: "உங்கள் தமிழர்கள் தங்கள் வாழ்க்கையில் பிரதான மாகச் செய்கிற ஒரே வேலை சினிமா பார்ப்பதுதான்; மீதி இருக்கும் ஒய்வான நேரத்தில்தான் அலுவலகப் பணி, குடும்பம், குழந்தை இவற்றைக் கவனிக்கிறார்கள்!"

இப்படி, வாழ்க்கையில் முக்கியப் பங்கு வகிக்கிற சினிமாவில் நாம் ஏன் ரசனையை வளர்த்துக் கொள்ளவில்லை?

சிற்றுண்டி சாப்பிட ஓட்டலுக்குப் போகி றோம். தோசை கொஞ்சம் வேகாமல் போய்விட்டால் நம்மால் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை.


தையல்காரனிடம் சட்டையைத் தைக்கக் கொடுக்கிறோம், கொஞ்சம் இறுக்கமாகத் தைத்துவிட்டிருந்தால் உடனே கண்டுபிடித்து விடுகிறோம்.

ஆனால் நம் சினிமாவைப் பொறுத்த வரை ஏன் இவ்வாறெல்லாம் நடைபெறுவ தில்லை? எதைக் கொடுத்தாலும் ஜீரணித்து விடுகிற - எதைப் பார்த்தாலும் அணிந்து கொள்கிற நிலைக்கு நாம் எப்படி தள்ளப் பட்டுவிட்டோம்? சினிமா ரசனை ஏன் நமக்குத் தாழ்ந்துபோனது?

சினிமாவைப் பொறுத்தவரை தமிழ் நாட்டில் எப்போதும் நடைபெறும் ஒரு விசித்திரத்தைச் சொல்லியே தீரவேண்டும். புதிய தமிழ் சினிமா வெளிவருகிற தினத்தில் முதல் காட்சி முடிந்து தியேட்டரிலிருந்து மக்கள் வெளியே வரும்போது, வாசலில் நிற்பவர்கள் படம் பார்த்துவிட்டு வருப வர்களை "படம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டால், பதில் என்னவாக இருக்கும்?

'படம் நன்றாக இல்லை' என்று சொன்னால் பரவாயில்லை. படம் பார்த்து விட்டு வருகிற சராசரி தமிழன் அப்படிச் சொல்வதில்லை. அவன் சொல்வதே வேறு! 'படம் ஐம்பது நாள் ஓடாது சார்... எனக் கென்னவோ நூறு நாள் ஓடும்னு தோணலை' என்றுதான் அவன் சொல்வான்.

பார்த்துவிட்டு வரும் படத்தைப் பற்றிக் கேட்டால் நன்றாக இருக்கிறதா இல்லையா



என்று சொல்ல வேண்டுமேதவிர, அந்தப் படத்தைப் பற்றிய வியாபார அக்கறை நமக்குத் தேவையில்லை.

ஒரு புத்தகத்தைப் படிக்கக் கொடுத்து, படித்து முடித்தவுடன் நன்றாக இருக்கிறதா என்று கேட்டால் 'ஆயிரம் பிரதி விற்குமா என்று சந்தேகமாக இருக்கிறது என்று யாரும் சொல்வதில்லை. ஆனால் சினிமா பார்க்கப் போகும் போது மட்டும் ஏன் வியாபாரி ஆகிவிடுகிறோம்? நம் ரசிகர்களிடையே இருக்கும் இந்த வியாபாரத்தனம்தான், நம் சினிமா ரசனையை வெகுவாகக் குறைத்து விடுகிறது என்று நான் நினைக்கிறேன்.

அடுத்ததாக, சினிமாவைப் பொறுத்த வரை நமக்குப் பொறுமை இல்லாதிருப்பது, தியேட்டரில் சென்று அமர்ந்தவுடனே திரைப் படத்தில் வேகவேகமாகத் திருப்பங்கள் நமக்கு வேண்டும். பத்து நிமிடத்துக்கு ஒருமுறை அதிர்ச்சியாகவோ, ஆர்ப்பாட்டமாகவோ ஏதாவது நடந்துகொண்டேயிருக்க வேண்டும். ஒரு நடனமோ, ஒரு பாட்டோ, ஒரு சண்டையோ ஏதாவது ஒன்று வேண்டும், இல்லை யென்றால் சிகரெட் அல்லது டீ குடிக்க வெளியே சென்றுவிடுவார்கள்.

சினிமா இயக்குநரும், தயாரிப்பாளரும் எங்கே உடனுக்குடன் திருப்பம் கொடுக்கா விட்டால் சினிமா பார்க்கிறவன் எழுந்து விடுவானோ என்று பயந்துகொண்டே படம் எடுக்கிறார்கள். 'மலையாள ரசிகர்களோ, வங்காள • ரசிகர்களோ இப்படி இல்லை; அவர்களுக்கு ரசனை வளர்ந்திருக்கிறது' என்று பலர் சொல்வதுண்டு. என்னைப் பொறுத்தவரை அடிப்படையில் மலையாளம், வங்காளம், தமிழ் எல்லோருடைய ரசனையும் ஒன்றுதான்.

ஆனால், மலையாள, வங்காள ரசிகர் களை அவர்களுடைய மொழிப் படங்கள் நன்றாகப் பயிற்றுவித்துள்ளன. அதுதான் வித்தியாசம். மலையாளத்தில் தொடக்க காலம் முதலாகவே நாவல்களின் அடிப் படையில்தான் பெரும்பாலான திரைப் படங்கள் வெளிவந்திருக்கின்றன. நாவல் களில் அதிரடித் திருப்பங்களும், சம்பவங் களும் இல்லாததனாலும், யதார்த்தமான வாழ்க்கை முறையே கதையாகச் சொல்லப் படுவதாலும், மலையாள ரசிகர்களுக்குப் பொறுமை அதிகம் வளர்ந்திருக்கிறது. அதனால்தான் இன்றைக்கும் மலையாள



சினிமா ரசிகன் தியேட்டருக்குச் சென்று இரண்டரை மணி நேரம் பொறுமையாகப் படம் பார்த்துவிட்டு வெளியே வந்து 'படம் நன்றாக இல்லை' என்று சாதாரணாகச் சொல்லிவிட்டுச் செல்கிறான்.

இயக்குநருக்கு, மலையாள சினிமா ரசிகன் தனது இரண்டரை மணி நேரத்தைப் பொறு மையாகத் தருவதனால் மலையாளத்தில் புதுமையாகவும் வித்தியாசமாகவும் திரைப் படங்கள் வெளிவர ஏதுவாகிறது. ஆனால் தமிழ் சினிமா இயக்குநருக்குத் தமிழ் ரசிகன் கொடுக்கும் பத்து நிமிடத்தில் ஒன்றையும் நேர்த்தியாகச் சொல்ல முடிவதில்லை. எனவே, ரசனை வளர வேண்டுமென்றால், நமக்குப் பொறுமை தேவை. இந்தப் பொறுமை இருந்தால்தான் நாம் சினிமாவில் வித்தியாசமான அணுகுமுறையையும் கதை யையும் கொண்டுவர முடியும்.

'சினிமாவில் நாம் என்ன எதிர்பார்க்க வேண்டும்?' என்பதைப் பற்றிய ஒரு தெளிவான கருத்து திரைப்பட ரசிகனுக்கு மிகவும் அவசியம். இரண்டரை மணி நேரத்தில் உல கத்திலுள்ள எல்லா விஷயங்களும் திரைப்ப டத்தில் வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது பேராசை அல்லவா?

காதல், சோகம், பாசம், சண்டை, நகைச் சுவை எல்லாம் இந்த இரண்டரை மணி நேரத்தில் வந்தாக வேண்டும். ஒரு திரைப் படத்தில் ஆணும் பெண்ணும் கதாபாத்திரங் களாக வந்து அவர்களுக்கிடையில் காதல் அரும்பவே இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். ரசிகர்கள் என்ன ஆவார்கள் என்று நினைத்துப்பாருங்கள்!



வாழ்க்கையில் காதல் ஏற்படாத ஆண் பெண் உறவுகள் இருக்கலாம். ஆனால் சினிமாவில் - ஒவ்வொரு சினிமாவிலும் காதல் வந்துதான் தீரவேண்டும் என்ற கட்டாயம் உண்டு. அதற்காகக் 'காதல்' திரைப்படங்களில் சொல்லப்படக்கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. சுமார் 100 அல்லது 150 விஷயங்களை ஒரே திரைப்படத்தில் வலிந்துசொல்வதால், விஷயங்கள் மலினப்படுத்தப்படுவதுடன் திரைப்படமும் தரத்தை இழக்கின்றது. மாறாக, ஓரிரு விஷயங்களை மட்டும் எடுத்துக் கொண்டு, அவற்றை மென்மையுடனும், நுட்பத்துடனும் சொல்லும்போது தரம் உயருகிறது, சொல்லப்படுகிற விஷயத்துக்குக் கம்பீரமும் கிடைக்கிறது. இப்படிப்பட்ட சௌகரியத்தை நாம் தமிழ் இயக்குநர்களுக்கு உருவாக்கித் தருவதில்லை.

அதனால், தமிழ் சினிமா ரசிகர்களுக்கு எனது வேண்டுகோள் என்னவென்றால், சினிமாவுக்குச் செல்லும்போது ஒரு வியாபாரியாக இல்லாமல்- அதிரடித் திருப்பங்களை எதிர்பார்ப்பவராக இல்லாமல் - குழந்தைப் பிறப்பு முதல் காதல் திருமணம் வரை, உலகில் நிகழ்கிற சகல சம்பவங்களையும் பார்த்துத்தான் தீரவேண்டும் என்று பிடிவாதம் பிடிக்காமல் சினிமா அரங்கிற்குள் சென்று அமருவோமானால் நாம் நல்ல ரசிகனாக மாற முடியும். ஒரு நல்ல சினிமாவை ரசிக்கும் பக்குவத்தை நாம் பெறமுடியும்.

சரி, நல்ல சினிமா என்றால் என்ன? இது ஒரு நியாயமான - ஆனால், சிக்கலான கேள்வி. இதற்குப் பலவிதமான பதில்கள் நாட்டில் உலவுகின்றன.

பல் துலக்குவதைப் பத்து நிமிடம் காட்டுவதும் வீதியில் நடந்துபோவதைப் பதினைந்து நிமிடம் காட்டுவதும், வசனமே இல்லாமல் மயான அமைதியுடன் மெதுவாக நகர்வதும் ஒரு கலைப்படத்தின் (ART Film) அடையாளங்கள். அதுவே நல்ல சினிமா என்று ஒரு சிலர் கூறுகிறார்கள்.

வேறு சிலர் (சிலர் என்பதைவிட பலர் என்றே கூறவேண்டும்) 'சினிமா தியேட்டருக்குள் சென்றமர்ந்தவுடனேயே நிமிடத்துக்கு நிமிடம் அதிரடித் திருப்பங்கள், பாட்டு, நடனம், சண்டை... இப்படி நேரம்போவதே தெரியாமல் ஜாலியாக ஓடுவதுதான் நல்ல சினிமா' என்று கூறுகிறார்கள்.

கலைப்படம், வர்த்தகப்படம் என்று பிரித்துப்பார்த்து நல்ல சினிமாவை வரையறுப்பது மிகக்கடினம்.

நல்ல சினிமாவிற்கு, ஜீவனுள்ள ஒரு கதைக் கரு வேண்டும். அதனுடைய கதாபாத்திரங்கள் தங்களுடைய மனநிலைப்படி இயல்பாக இயங்குவதற்குச் சௌகரியமான ஒரு திரைக்கதை வேண்டும். அந்தத் திரைக்கதையைச் சினிமாவாகப் பரிமாற்றம் செய்யத் திறமை மிகுந்த இயக்குநர் வேண்டும்.

கதாபாத்திரங்களின் உணர்ச்சிகளை வெளிக்கொணர்வதற்கு நடிகர் நடிகைகளுக்கு 'நடிப்புத்திறன் வேண்டும்.

இவை மட்டுமின்றி - ஒளிப்பதிவு, இசை, படத்தொகுப்பு, அரங்க அமைப்பு முதலான பல அம்சங்கள் சரியான விகிதத்தில் அமைந்து மெருகூட்டுமானால் - ஒரு நல்ல சினிமா உருவாகும்.

"மண்புழுக்கள்" ஆன விவசாயி களுக்கு மாடுகள் பேரில் உள்ள பற்றும் பாசமும் அறிவேன் நான். அவர்களுக்குக் காலையில் கண் விழித்ததும் மாட்டின் முகத்தைத் தான் பார்க்கணும், அதுக்காகவே பலர் வீட்டிற்கு முன்னால் மாட்டுத் தொழுவை அமைத்திருப்பார்கள்.


மாடுகளைப் பற்றிய ஒவ்வொரு விஷயங்களும் அவர்களுக்குத் தளபாடம். மாடுகளைப் பற்றிய தொன்மங்கள் (மித்) கதைகள், மாட்டு வைத்தியமுறை (வாகடம்) இவை பற்றியெல்லாம் தெரிந்து வைத்திருப்பார்கள்.

எனது வட்டார வழக்குச் சொல்லகராதி நூலின் பிற்சேர்க்கையில் மாடுகளைப் பற்றியும் ஆடுகளைப் பற்றியும் உள்ள தகவல்களில் பெரும்பான்மை எனக்குச் சொன்னவர் இந்த நடுத்தெருக் கந்தசாமி நாயக்கர்தான். தென் தமிழ்நாட்டில் இவர் போகாத மாட்டுச் சந்தையே கிடையாது. அவர் கல்யாணமாகி, குடும்பஸ்தராக ஆவதற்கு முன்னால் இதையே ஒரு ராப்தாவாக வைத்துக் கொண்டிருந்தார்.

நவரத்தினங்களைப் பார்த்துத் தேர்ந்தெடுக்க நிபுணர்கள் என்று

# மாட்டுப் பற்று

**_ கி.ராஜநாராயணன்**



மனிதர்களினால் அபூர்வமானவர்களைப் பற்றி, வீரர்களைப் பற்றி எப்படி மக்கள் கதை கதையாகச் சொல்லி வியக்கிறார்களோ அதே போல மாடுகளைப் பற்றியும் சொல்லிச் சொல்லி மகிழ்கிறார்கள்.

எண்பது வயசாகிவிட்ட முதியவர் எங்களூர் நடுத்தெருக் கந்தசாமி நாயக்கர் இப்பவும் சொல்லுவார் "ராஜு" நா ஒரு செம்பரை வச்சிருந்தேன் என்று ஆரம்பிக்கும்போதே பரவசத்தால் முகம் மலரும். அந்த மாட்டை மட்டும் அவரால் மறக்கவே முடியவில்லை.

அந்த செம்பரைக் காளையைப் பற்றி அவர் என்னிடம் கதைகதையாய்ச் சொல்லியிருக்கிறார். கேட்டுக்கொண்டே இருக்கலாம். பொழுது நகராத நேரங்களில் அவரைத் தேடிப் போவேன். தனது குடும்பம் சொந்த பந்தம் இவைகளைப் பற்றிப் பேசுவதையும்விட மாடுகளைப் பற்றிப் பேசுவதில் தான் அவருக்குப் பெருவிருப்பம். அவரிடம் நான் கேட்ட தகவல்கள் ஏராளம். (கால்நடைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் அவரைப் பேசச் சொல்லணும்!)

எப்படி இருக்கிறார்களோ அதே போல் மாடுகளைப் பார்த்துத் தேர்ந்தெடுக்க நிபுணர்களும் இருக்கிறார்கள். அதில் ஒருவர்தான் சஷயார. ஒரு மாடு, பார்வை தூரத்தில் நின்று கொண்டிருக்கும் போதே "ஆ அழகான மாடு" என்று சொல்லுவார். இது எப்படி சாத்தியம் என்று ஒரு நாள் அவரிடம் கேட்டேன். அவர் சொன்னார்.

பார்வை லட்சணங்களில் ஒரு காளைக்கு இருக்க வேண்டியது மொத்தம் பத்து.

சிறியவை அய்ந்து.

பெரியவை அய்ந்து.

சிறியவை தலை, கொம்புகள், தாடி, கோசம், வால்.

பெரியவை கண்கள், மார்பு, கழுத்து, எலும்புகள், கால்கள்.

கொம்புகளைப் பற்றிப் பேச்சு வந்தபோது, கை விரல்களால் அபிநயம் பிடித்துக் காட்டுவது போல மாட்டுக் கொம்புகளின் வகைப் பெயர்களைச் சொன்னார்.

விரி கொம்பு, முன் கொம்பு, மாடக் கொம்பு, மட்டிக் கொம்பு, பொத்தைக் கொம்பு, சுருட்டைக் கொம்பு, கொக்கரக் கொம்பு, கொள்ளிக் கொம்பு, கூடு கொம்பு, குத்துக் கொம்பு, கிளிக்கொம்பு, காடு பார்த்த கொம்பு, ஆட்டுக் கொம்பு, அலைக்கொம்பு என்று அப்போது ஞாபகத்துக்கு வந்தவைகளைப் பற்றிச் சொன்னார்.

மாடுகளின் நிறங்களைப் பற்றிச் சொன்னபோதுதான் பிரமிப்பு ஏற்பட்டது. நிறங்களும், ஸ்வரங்களும் ஏழுதான்; அவை கலக்கும் போது எத்தனையோ நிறங்களும், ராகங்களும் வருவது போல இருந்தது அவர் சொன்ன மாட்டின் நிறங்கள்.

வெள்ளை, மயிலை, புளியம், போர்ச் செம்பரை (புளியம்பூச் செம்பரை) புல்லை, பஞ்சகல்யாணி, நாவெள்ளை, செவலை, செவலை செம்பரை, செம்பரை, செந்தாரை மயிலை, கருங்குரால், கண்ணாடி மயிலை, செந்தாரை. சுத்தவெள்ளை, சந்தனப்புல்லை, குரால், காரி, கருவெள்ளை, கருமயிலை, கருப்பு, கருத்தச் செம்பரை, கருஞ்சிவலை, கரிசமால், அத்திக்காய்புல்லை, மாட்டின் நிறம், அவரவர் ராசிக்குப் பிடித்த நிறம் என்றெல்லாம் உண்டாம்: மனசுக்குப் பிடித்த நிறம் என்றும் உண்டாம்!

சுழிகளைப் பற்றிய பேச்சு வந்தபோது ஏற்பட்டு- இருக்க வேண்டிய- சுழிகள் என்றும் அதிகப் படியாக "இருக்கும் சுழிகளைப் பற்றியும் சொன்னார்.

நல்ல பலன் தரும் சுழிகள், அபூர்வமான சுழிகள், தீமை செய்யும் சுழிகள் என்றெல்லாம் உண்டு என்றார். சுழிகளை வைத்தே மாட்டின் குணங்களையும் சொல்லி விட முடியும் என்றார்.

சங்குகளில் வலம்புரிச்சங்கு இடம்புரிச்சங்கு என்று இருப்பது போலச் சுழிகளில் இடதுபக்கம் சுழித்திருக்கும் சுழி வலதுபுறம் பார்த்து சுழித்திருக்கும் சுழி என்று இருக்கிறது. இந்த மாட்டின் உடம்பில் இருக்கும் இடத்தைப் பொறுத்து பலன் சொல்கிறார்கள்.

மாட்டின் ஆசன வாய்ப் பக்கத்தில் ஒரு சுழி இருக்கும். மாடு சாணி போட வாலைத் தூக்கும் போது தான் தெரியும். (வாலைத் தூக்கிப் பார்க்கலாம் என்றால் வேகமான மாடு என்றால் வாலைத் தொடவே விடாது!) இந்தச் சுழிக்குப் பெண்டிழந்தான் சுழி என்பார்கள். திருமணமானவர்கள் — 'அப்பாடி யோவ் இந்த மாடு நமக்கு வேணாம்' என்று ஓட்டம் பிடிப்பார்கள். தாரம் இழந்த விதவையாடவர் மட்டுமே இந்த மாட்டை விலை கொடுத்து வாங்குவார்கள்.

மாட்டிலுள்ள சுழிகளை எல் லோராலும் கண்டுபிடித்துவிட முடியாது, வைரத்தில் நீரோட்டம் பார்க்கத் தெரிந்தவர்களைப் போலத்தான் இதிலும். இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள சுழிகளின் பெயர்கள் வருமாறு:

(இவை வட்டாரம் ,தோறும் பெயர்கள் மாறும்.)

நெத்திச்சுழி, நீர்க்குத்துச்சுழி, மேக்கா அல்லது நோக்காச்சுழி, மூளை பிடுங்கிச் சுழி, மண்டை விலங்குச் சுழி, மடக்குவால்சுழி. பெண்டிழந்தான் சுழி, புரான் சுழி, செவிப்பாம்புச்சுழி,செவிச்சுழி, கொம்புச் சுழி, பின்னாகசுழி, பூரான்சுழி, பூரான்சுழி *11*, பிடரி விலங்குச்சுழி, பிடரிச்சுழி, பாடைச் சுழி, பாசிபந்துச்சுழி, பறவைச்சுழி, பட்டரைச்சுழி, நல்சுழி, டமானச்சுழி, கால்விலங்குச்சுழி, இடிமேல் இடி கொடைமேல் கொடைச்சுழி, அஞ்சுசுழி (ஐந்துசுழி!) அசைவுச்சுழி.

இவைகளின் விவரங்கள் பலன்கள் பற்றித் தெரிந்துகொள்ளப் பெரு விருப்பம் உடையவர்கள் எனது "வட்டார வழக்குச் சொல்லகராதி" பக்கம் *315*ல் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

இவை தவிர, மாட்டின் வயசைத் தெரிந்துகொள்ளும் பல்ப்பாடு (பல்லைப் பிடித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளும் விசயங்கள்) கை போட்டு மாட்டுக்காரனோடு பகிரங்க ரகசியமாகத் துணி மறை வில் வில்கள் தொட்டு பேசப்படும் பரிபாஷைகள் இவையெல்லாம் வட்டாரத்துக்கு வட்டாரம் சொற்கள் மாறுபடும்! இந்த "மொழி" தெரிந்த வர்கள்தான் சந்தைகளில் மாட்டின் விலை பேச முடியும்.

சம்சாரிகள் ஆணும் பெண்ணும் குழந்தைகள் அடங்கலாக மாட்டை எப்படி நேசிக்கிறார்கள் என்பது மற்றவர்களால் நம்ப முடியாது. மாடு இல்லாதது வாழ்க்கை இல்லை என்பது எங்களில் எழுதிவைக்காத கோட்பாடு.

தங்கர்பச்சானின் வெள்ளை மாடுகள் சிறுகதைத் தொகுப்பின் முன்னுரை

**நன்றி: 'தாமரை', டிசம்பர், 1996.**

## தெரிந்து கொள்வோம்

### ஆசிய வளர்ச்சி வங்கி (ADB)

இது 1966-ஆம் ஆண்டு செயல்படத் துவங்கியது. ஜப்பான் நாட்டு நிதியுதவியினால் நடைபெறும் வங்கி இது. ஆசியாவிலுள்ள இதன் உறுப்பு நாடுகளுக்குக் கடனுதவி சலுகை முறையில் வழங்குவதே இதன் நோக்கமாகும்.

### நேட்டோ (NATO)

இது 1949-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. வட அட்லாண்டிக் இராணுவ ஒப்பந்தம் என்னும் இதன் உறுப்பு நாடுகள் தாக்கப்பட்டால் மற்ற நாடுகள் உதவிக்கு வரும். இதன் உறுப்பு நாடுகள் இத்தாலி, ஐஸ்லாந்து, நார்வே, ஸ்பெயின், நெதர்லாந்து, பெல்ஜியம், துருக்கி, அமெரிக்கா, கிரீஸ், மேற்கு ஜெர்மனி, கனடா, பிரிட்டன், லக்ஸம்பர்க், டென்மார்க், இத்தாலி ஆகும்.

### ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டமைப்பு (EEC)

இது 1957-ஆம் ஆண்டு மார்ச் 25-ஆம் நாள் துவக்கப்பட்டது. இதில் தற்போது 12 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. இவ்வமைப்பிற்கு ஐரோப்பியப் பொதுச் சந்தை (ECM) என்ற பெயரும் உண்டு. இதில் உலகின் செல்வம் கொழிக்கும் பல நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

# ஜென் கதைகள்

மாணவர் பக்கம்

## இன்னுமா சுமக்கிறாய்?

குருவும், சீடனுமாய் நெடுவழிப் பயணம் போய்க்கொண்டிருந்தார்கள்.

காடு, மலைகளையெல்லாம் கடந்து சென்று கொண்டிருக்கும்போது, வழியில் ஒரு ஆறு குறுக்கிட்டது.

ஆற்றங்கரையில் ஓர் இளம் பெண் நின்றுகொண்டிருந்தாள். ஆற்றையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

குருவும், சீடனும் அவளை நெருங்கினார்கள். அவள் முகத்தில் கவலையின் சாயல்.

இவ்வளவு அழகான இளம் பெண் ஏன் இவ்வாறு ஆற்றையே வெறித்துப் பார்த்தபடி நின்றுகொண்டிருக்கிறாள்? எதையாவது ஆற்றில் தவற விட்டுவிட்டாளோ? என்று நினைத்தான் சீடன்.

"பெண்ணே! ஏன் இப்படி, இங்கே தன்னந்தனியாக நின்று கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார் குரு.

''சுவாமி! ஆற்றைக்கடந்து செல்லவேண்டும், பயமாக இருக்கிறது.'' என்றாள் அவள்.

''கவலைப்படாதே அம்மா. நான் உதவுகிறேன்.'' என்று சொல்லிவிட்டு அவளை அப்படியே தூக்கிக் கொண்டு ஆற்றில் இறங்கி நடக்க ஆரம்பித்தார்.

சீடன் திகைத்துப் போனான்!

ஆழமில்லா ஆறு. குரு அவளைச்சுமந்தபடியே நீரில் இறங்கி நடந்தார். சீடன் திகைப்புடன் குருவின் பின்னால் நடந்தான்.

மறுகரை வந்ததும் அவளைக் கீழே இறக்கிவிட்டார் குரு.

''நன்றி சுவாமி!'' என்று சொல்லிவிட்டு அவள் நடந்துபோனாள்.

சீடனின் குழப்பம் தீரவில்லை. பேசாமல் குருவின் பின்னே தொடர்ந்து நடந்தான்.



அன்று மாலை சீடன் பொறுமையிழந்தான். அவனால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

''சுவாமி!''

''என்ன?''

''தங்களைப் போன்ற குருமார்கள் பெண்ணைத் தொடக்கூடாதே?''

''ஆமாம். அதற்கென்ன இப்போது?''

''தாங்கள் இன்று காலை, அந்தப் பெண்ணைத் தொட்டுத் தூக்கினீர்களே! அது எப்படி?''


''அட, அவளை நான் அப்பொழுதே இறக்கி வைத்துவிட்டேனே. நீ இன்னுமா அவளைச் சுமந்து கொண்டு வருகிறாய்?'' என்று கேட்டார் குரு.

–புறத்தே சுமக்கிறேன்; அகத்தினுள்ளே
இன்னுமொரு பழங்குப்பை சுமக்கிறாய்நீ..."

–பாரதியார்.

## நீ, நான்தான்!

ஐயோ, நான் எவ்வளவு அற்பமானவன், என்னை அந்தப் பெரிய அலைகள் பாய்ந்து



வந்து, அமுக்கி அழித்து விடுகின்றனவே' என்று மிகவும் வருத்தப்பட்டது ஒரு சிற்றலை.

அப்போது ஒரு பெரிய அலை பாய்ந்து வந்தது.

ஐயோ! என்று அலறியது சிற்றலை.

"உன் முகத்தை நீ பார்த்ததில்லையா; உண்மையான உன் முகத்தை?'' என்று கேட்டது பேரலை.

''இல்லை. நான் யார்? நான் ஒரு அலைதானே?'' என்று கேட்டது சிற்றலை.

'நீ அலைதான். ஆனால், அவை உன் வடிவமல்ல; அது ஒரு தற்காலிக வடிவம். நீ தண்ணீர்.''

''தண்ணீரா?''

''ஆம் தண்ணீர். என்னைப்போல என் வடிவமும் தற்காலிக வடிவம்தான். அடிப்படையில் நானும் தண்ணீர்தான். உன்னைப்போல, வீணாக நீ கவலைப்படுகிறாய், குழப்பமடைகிறாய். உன் உண்மையான நிலையை, அடிப்படையை உணர்ந்தால் அச்சம் இல்லை; அவலம் இல்லை.''

''அப்படியா? நீயும் நானும் ஒன்றா?''

''ஆம்! மாபெரும் இயற்கையின் வெவ்வேறு தற்காலிக வடிவங்கள். அடிப்படையில் எல்லாம் ஒன்றே. கவலை விடு'' என்றது பேரலை.

உலகின் அனைத்துப் பொருள்களும், உயிர்களும் ஆதி இயற்கையின் மூல அடிப்படையின் வெவ்வேறு வடிவங்களே. பிரிவினை எண்ணமே நாம் ஆசாபாசங்களுக்கும், அச்சம் கவலைகளுக்கும் காரணம்.

''அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்தது.''

–தாயுமானவர்.

## அவசரமே தாமதம்!

ஓர் இளைஞன் சிறந்த வாள் பயிற்சி பெறுவதற்காகக் குருவைத் தேடிப் புறப்பட்டான். வல்லமை வாய்ந்த குரு ஒருவர் மலைமீது இருப்பதாகச் சொன்னார்கள்.

இளைஞன் ஆவலோடு மலையேறிச் சென்று குருவைக் கண்டான். வணங்கினான். தன் வேண்டுகோளைத் தெரிவித்தான்.

''குருவே, நான் கடினமாக உழைத்து தீவிரமாகப் பயிற்சி எடுத்தால் எவ்வளவு காலத்தில் வல்லமை பெறமுடியும்?'' என்று கேட்டான்.

''பத்து ஆண்டுகள் பிடிக்கும்'' என்றார் ஆசான்.

''என் தந்தை தள்ளாத வயதில் இருக்கிறார். நான் அவ்வளவு காலம் இங்கே தங்கியிருக்க



முடியாது. நான் சீக்கிரம் ஊர் திரும்பி அவரைக் கவனிக்க வேண்டும். மிகக்கடுமையாகப் பயிற்சி எடுத்தால் எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியும்?'' என்று கேட்டான் இளைஞன்.

''அநேகமாக முப்பது ஆண்டுகள் பிடிக்கலாம்'' என்றார் அவர்.

''என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? முதலில் பத்து ஆண்டுகள் என்றுதானே சொன்னீர்கள்! கடுமையாகப் பயிற்சி எடுத்தால் சீக்கிரம் முடிக்க முடியுமல்லவா?'' என்றான் அவன்.

''அப்படியா? அப்படிச் சீக்கிரம் கற்க வேண்டுமானால், சுமார் எழுபது வருடங்கள் என்கூட நீ இருக்க வேண்டி வரும்.'' என்றார் குரு.

அவசரப்பட்டால் அகந்தையில், பதற்றத்தில், எந்தக் காரியமும் உரிய காலத்தில் ஒழுங்காக முடியாது.

*–'நான் என்னும் ஓர் அகந்தை எவர்க்கும் வந்து*
*நலிந்தவுடன் ஜக மாயை நானா ஆகித்*
*தான் வந்து தொடரும். இத்தால் வளரும் துன்பச்*
*சாகரத்தின் பெருமை எவர் சாற்ற வல்லார்''*

*–தாயுமானவர்.*

## அச்சம் தவிர்!

தளபதி ஒருவருக்கு அழகான கோப்பை ஒன்று அன்பளிப்பாகக் கிடைத்தது.

அவர் அதைத் தம் மேசைமேல் வைத்து அழகு பார்த்து இரசித்துக் கொண்டிருந்தார்.

பிறகு அதைக் கையில் எடுத்துத் தடவிப் பார்த்தார். கைகளில் உருட்டிப் பார்த்தார்.



பிறகு மெல்லத் தூக்கிப் போட்டுப் பிடித்துப் பார்த்தார்.

அப்போது அது சட்டெனக் கைநழுவிக் கீழே விழுந்துவிடும் போலிருந்தது.

அவர் கதிகலங்கிப்போய் சட்டெனப் பிடித்துக் கீழே விழாமல் மேசைமேல் வைத்துவிட்டார்.

''குப்'பென்று வியர்த்துவிட்டது!

அது அவருக்கே வியப்பாக இருந்தது.

''எத்தனை போர்க்களங்களில் பகைவர் படை நடுவே அஞ்சாமல் பாய்ந்திருக்கிறோம். பாய்ந்து வரும் வாள்கண்டு நடுங்காமல் எதிர்த்துத் தாக்கியிருக்கிறோம். அப்போதெல்லாம் திடுக்கிடாத என் மனம் இந்த சின்னக் கோப்பை கை நழுவும்போது தடுக்கிவிட்டதே! என்ன அதிசயம் இது!'' என்று வியந்தார் தளபதி.

சற்று ஆற அமர சிந்தித்துப் பார்த்தபோது, உண்மை புலனாயிற்று.

அந்தப் பொருளின் மீது கொண்ட பற்றுத்தான் அந்த அச்சத்திற்குக் காரணம் என்பதை உணர்ந்தார்.

உடனே அந்தக் கோப்பையைத் தூக்கி எறிந்து உடைத்து நிம்மதியடைந்தார்!

*–'அஞ்சுவ தோரும் அறனே! ஒருவனை*
*வஞ்சிப்ப தோரும் அவா.''*

*–வள்ளுவர்.*

## மனக்குரங்கு...

ஓர் உழவன்; தன் தோட்டத்தை உழும்போது ஒரு தங்கச் சிலை கண்டெடுத்தான். அது புத்தர் சிலை. மண்ணில் புதைந்து காணாமற்போன பதினெட்டு புத்தர் சிலைகளில் ஒன்றுதான் அது! நல்ல கனம்!

ஏராளமான விலைக்குப் போகும் என்று தெரிந்தது. எல்லையற்ற மகிழ்ச்சியுடன் அதை மறைத்து வீட்டிற்குக் கொண்டு வந்தான் அவன்.

குடும்பத்தார்க்கும் ஏகப்பட்ட மகிழ்ச்சி. செல்வத்தில் மிதக்கலாம் என்று கனவு காண ஆரம்பித்து விட்டார்கள்...

ஒவ்வொருவரும் என்னென்ன வாங்கலாம் என்று கற்பனையில் மிதந்து கொண்டிருந்தார்கள்...

ஆனால், அந்த உழவன் மட்டும் சோகமே உருவமாக ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அதைக் கண்டு அவன் மனைவி ஆச்சரியப்பட்டாள். அவன் அருகில் வந்தாள்.

''என்ன இது! கன்னத்தில் கைவைத்து இப்படிக் கவலையுடன் அமர்ந்திருக்கிறீர்களே? எவ்வளவு பெரிய செல்வம் கிடைத்திருக்கிறது, என்ன விஷயம்?'' என்று கேட்டாள்.

''மற்ற பதினெழு சிலைகளும் எங்கே புதையுண்டு கிடக்கின்றன என்பது தெரியவில்லையே" என்றான் அவன். கவலையுடன்.



–'ஆசை எனும் பெருங்காற்றோடு இலவம்பஞ்சு
என வம் மனது அலையும் காலம்
மோசம் வரும்....''
–தாயுமானவர்.

## தலையும் வாலும்!

**கா**ட்டில் ஒரு பாம்பு நிம்மதியாக வாழ்ந்து வந்தது.

ஒரு நாள் அதன் வால், உயர்ந்து நின்று தலையைப் பார்த்து "அது என்ன எப்பொழுதும் நீயே முன்னால் போய்க் கொண்டிருக்கிறாய்? நான் என்ன பின்னால் வந்து கொண்டே இருக்க வேண்டுமா என்ன? இது என்ன நியாயம்?" என்று கேட்டது.

"மரியாதைக்குரிய வால் அவர்களே, எனக்குக் கண்கள் இருப்பதால், நான் முழு உடம்பையும் வழிநடத்திச் செல்கிறேன். உமக்குக் கண்கள் இல்லையே! எப்படி முன்னால் போக முடியும்?" என்று கேட்டது தலை.

"நான் பின்னாலிருந்து உந்திக் கொடுக்காவிட்டால் நீ எப்படி முன்னால் போக முடியும்?" என்றது வால்.

"அதென்னவோ, நான்தான் முன்னால் இருப்பேன். முன்னால் போவேன். அதுதான் இயற்கை, அதுதான் வழக்கம். அதை மாற்ற முடியாது. நீ செய்ய வேண்டியதைச் செய்து கொள்!" என்று தலை முன்னால் போக ஆரம்பித்தது.

வாலுக்குக் கோபம்! "நான் யாரென்று காட்டுகிறேன் பார்!" என்று உள்ளுக்குள் கருவிக் கொண்டது.

பாம்பு நகர்ந்து போய்க் கொண்டிருந்த போது வழியில் குறுக்கிட்ட ஒரு மரத்தைச் சுற்றிப் பிடித்துக் கொண்டது வால். உடலையும் சேர்த்து இழுத்துச் சுற்றிக்கொண்டது.

"இனி, மேலே போ பார்க்கலாம்!" என்று தலையைப் பார்த்து ஏளனமாகக் கூறியது வால்.


பாம்பினால் நகர முடியவில்லை.

இழுத்து இழுத்துப் பார்த்தது. மரத்தைச் சுற்றியிருந்த உடலை வெளியே இழுக்க முடியவில்லை. வலித்தது.

நீண்ட நேரம் முயன்று பார்த்தபின், தலை தன் தோல்வியை ஒப்புக்கொண்டது.

"சரி, நான் தோற்றுவிட்டேன். இனி நீ விருப்பப்படியே செய்யலாம். நீ முன்னால் போ! நான் உன்னைப் பின்பற்றி வருகிறேன்" என்றது தலை.

உடனே வால் நகர ஆரம்பித்தது.



முழு உடலையும் தலையையும் இழுத்துக்கொண்டு நகர்ந்தது.

எப்படியோ போகட்டும் என்று தலை, கண்களை மூடிக்கொண்டது.

ஆனால், வாலினால் சரியான பாதையில் போக முடியவில்லை. அங்குமிங்கும் முட்டி மோதியது. வாலுக்குக் கண்கள் இல்லாததால் பள்ளத்தில் விழுந்து உருண்டது. காயம்பட்டது. கடைசியில் இறந்தேவிட்டது.

உலகப் பொருள்கள் எல்லாவற்றிற்கும் முக்கியத்துவம் உண்டு. அடிப்படையில் எல்லாம் சமம் என்றாலும் ஒவ்வொன்றிற்கும் ஓர் இடம் ஓர் பொறுப்பு உண்டு; அதன் எல்லை கடத்தல் அகங்காரம். அதனால் விளைவது அழிவு!

**-"காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக்குழவியைப்போல்..."**

**- தாயுமானவர்**

**- "மீண்டும் ஜென் கதைகள்" தொகுப்பிலிருந்து.**

**வெளியீடு: கண்ணதாசன் பதிப்பகம், 12, கண்ணதாசன் சாலை, தி.நகர்., சென்னை17.**

# தெரிந்துகொள்வோம்

### அரபு லீக் (AL)

இது 1945-ஆம் ஆண்டு மார்ச் 22-ல் தோற்றுவிக்கப்பட்டது. இதன் உறுப்பு நாடுகள் ஓமன், லிபியா, அரேபியா, சோமாலியா, டுனீஷியா, அரபுக் குடியரசு, பஹ்ரைன், குவைத், லெபனான், சவூதி அரேபியா, பாலஸ்தீனம், அல்ஜீரியா, சிரியா, சூடான், ஏமன், மொராக்கோ, மாரிடோனியா முதலியவையாகும்.

### ஒபெக் (OPEC)

இது பெட்ரோல் ஏற்றுமதி செய்யும் நாடுகள் நிறுவனமாகும். 1960-ல் இக் கூட்டமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அதிகமான விலைக்கு எண்ணெய் விற்பதைத் தடுத்து நிறுத்த இரான், இராக், குவைத், வெனிசுவேலா, சவூதி அரேபியா ஆகிய நாடுகள் ஒன்றுகூடி இந்நிறுவனத்தை ஆரம்பித்தன. தற்போது 80 சதவிகிதம் எண்ணெய் இதன் மூலம் ஏற்றுமதியாகின்றது. ஓரளவு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளும் இதில் உறுப்பு நாடுகளாகச் சேர அனுமதி உண்டு.

### செஞ்சிலுவைச் சங்கம் (ICRC)

இது 1863-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. போர் மற்றும் இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் அல்லல்களைக் களைய இச்சங்கம் உதவுகிறது. இது 100 நாடுகளில் இயங்கி வருகிறது. மூன்று முறை நோபல் பரிசுகள் பெற்றுள்ளது.

### இண்டர்போல் (INTERPOL)

இது 1923-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இதில் 147 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. இதன் நோக்கம் அனைத்து நாடுகளின் காவல் துறையினரின் ஒத்துழைப்புடன் குற்றங்களைக் களைவதேயாகும்.




**பிரச்சினை :**

**எ**ங்கள் ஊர் ராமாவரம் தோட்டம் எதிர்ப்புறம் மணப்பாக்கம் செல்லும் சாலை. இதன் வழியாக மணப்பாக்கம், கொளப் பாக்கம், கெருகம்பாக்கம் என்று குன்றத்தூர் மற்றும் போரூர் இணைப்புச்சாலை அமைந்துள்ளது. இந்தச்சாலை ராமாவரம் தோட்டம் நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 10 கி.மீ. தூரம் செல்லும் மேற்படி கிராமங்களுக்குச் சென்னைக்கு கிராமத்தில் இருந்து பொது மக்கள் மற்றும் பள்ளி சிறுவர், சிறுமிகள், அலுவலகப் பணியாளர்கள், தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள், அங்காடிகளுக்குச் செல்பவர்கள், மருத்துவ வசதி தேடிச் செல்பவர்கள் என நாள் ஒன்றுக்குச் சுமார் 1000 முதல் 5000 வரை ம்க்கள் பஸ் பயனம் மேற்கொள்கிறார்கள். மேற்படி கிராமங்களுக்குப் பல்லவன் பஸ் தி.நகர் முதல் அய்யப்பன்தாங்கல் வரை சென்று வர 1/2 மணி நேரத்திற்கு அல்லது 1 மணி நேரத்திற்கு ஒன்று என (குறித்த காலம் இல்லை) 2 பஸ்களும், 21இ, 9எ, 54என் ஆகிய மூன்று பஸ்களும் பிராட்வே முதல் கெருகம்பாக்கம் வரை காலை ஒரு முறையும் மாலை ஒரு முறையும் வந்து செல்கிறது. மேற்படி தடம் எண்கள் கொண்ட பஸ்,குறித்த காலத்தில் எந்த ஒரு நாளிலும் வருவது கிடையாது. மேலும் சில தினங்களில் பல்லவன் பஸ் 54 குறித்த காலத்தில் வந்தால் பிரேக் டவுன் என்ற பேரில் ஓரம் கட்டி நிறுத்திவிடுவார்கள். சுத்தமாக பஸ் வருவதே கிடையாது. பல்லவன் நிறுவனம் மாற்று ஏற்பாடு செய்வதே கிடையாது. எனவே, எங்கள் ஊர் பஸ் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவும், கூடுதல் பஸ் விட்டு எங்கள் குறையினைத் தீர்த்து வைக்கும்படியும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.


**ரூபினி ஸ்டெல்லா**
**மணப்பாக்கம்**

**தீர்வு :**

மணப்பாக்கத்திற்கு, மணப்பாக்கம் வழியாக இயக்கப்படும் 4 தடங்களில் மொத்தம் 40 பயணநடைகள் பயணிகள் நலனுக்காக இயக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். பேருந்துகளைச் சரிவரவும் குறித்த நேரத்திலும் இயக்க ஆவன செய்யப் பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தடம் எண். 54பி - 2 நடைகள்
தடம் எண். 54என் எல்எஸ்எஸ் - 6 நடைகள்
தடம் எண். 9 எ - 4 நடைகள்.
தடம் எண். 21இ விரிவு

**பொதுமேலாளர் (இயக்கம்) பல்லவன்**
போக்குவரத்துக் கழகம்.



**பிரச்சினை :**


**எங்கள் ஊர் குன்றத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட 'தரப்பாக்கம்' கிராமம் இவ்வூரைச் சுற்றி - தண்டலம், இரண்டாங்கட்டளை, மேல் மாநகர், பாரதி நகர், சதாநந்தபுரம் ஆகிய கிராமங்களைக் கொண்டதும் இங்கு மூன்றாயிரத்திற்கு மேற்பட்ட மக்களும் வசிக்கின்றனர். நாங்களும் எங்களைச் சுற்றியுள்ள கிராம மக்கள் அனைவரும் கடைக்கோ அல்லது கல்லூரி, பள்ளி மற்றும் வேலைக்கோ செல்லவேண்டும் என்றால், ஆற்றைக் கடந்துதான் செல்ல வேண்டும். சிறிது மழை பொழிந்தாலும் நாங்கள் அனைவரும் கிராமத்தை விட்டுச் செல்ல முடியாத சூழ் நிலையால் தவித்துவருகின்றோம். அவ்வாற்றில் நீர் வற்றியபின்புதான் அவரவர் பணியைச் செய்ய ஏதுவாகிறது. கடந்த ஆட்சியில் பல கடிதங்கள் அனுப்பியும் பயன் ஏதுமில்லை. ஆனால், இப்போதுள்ள ஆட்சியானது உடனுக் குடன் மக்களின் குறைகளைத் தீர்த்துவைத்துக் கொண்டிருக்கிறது. எனவே, 'அனகாபுதூர் - தரப்பாக்கம்' இடையே நடை பாலம் கட்டி கொடுத்து எங்கள் குறையைத் தீர்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

**பொன். பாலு,**
தரப்பாக்கம், சென்னை - 602 101.

**தீர்வு :**

அனகாபுதூர் பகுதி அனகாபுதூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியாகும். தரப் பாக்கம் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊராட்சிப் பகுதியாகும். இந்த இரண்டு பகுதிகளையும் இணைக்கும் இடத்தில் அடையாறு ஆறு உள்ளது. இந்த ஆற்றின் குறுக்களவு சுமார் 100 மீட்டர் நீளமாகும். இந்த ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட ஊராட்சி நிதியிலோ பேரூராட்சி நிதியிலோ போதிய வசதி இல்லை. ஆகவே இந்தப் பாலம் கட்டும் திட்டத்தை அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு மூலம் அரசுத்துறை செய்து முடிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நா.கண்ணன்**
ஆணையாளர்
குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம்
(இ) படப்பை



**பிரச்சினை :**

**தெ**ன்னாற்காடு வள்ளலார் மாவட்டம் கடலூர் வட்டம் கல்குளம் கிராமத்தில் கள்ளச் சாராயம் விற்கிறார்கள். ஊர் மக்கள் முயற்சி செய்தும் தடுத்து நிறுத்த முடியவில்லை. அதனால், தங்கள் மூலமாக இந்த கள்ளச்சாராயத்தைக் கல்குளத்தில் விற் காமல் தடுக்க முயற்சி எடுக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

**ஊர்ப் பொதுமக்கள்,**
கல்குளம்.

**தீர்வு :**

மேற்படி கிராமத்தில், குறிஞ்சிப்பாடி காவல் நிலைய உதவி ஆய்வாளர் மதுவிலக்கு வேட்டை நடத்தி குறிஞ்சிப்பாடி காவல் நிலைய குற்ற எண். 465/96 மற்றும் 535/96 பிரிவு 4(1) (ஏ) தமிழ்நாடு மதுவிலக்கு அமல்பிரிவு சட்டப்படி சாராயம் விற்பனை செய்பவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தொடர்ந்து சாராய விற்பனை நடைபெறா வண்ணம் கண்காணிக்கப்பட்டுவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டி.வி. ரவிச்சந்திரன், இ.கா.ப.**
காவல்துறை (கண்காணிப்பாளர்)
தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம்.

**பிரச்சினை :**

**எ**ங்கள் ஊரான பாலூர் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், பண்ருட்டி வட்டம், அண்ணா கிராமம் ஒன்றியத்தில் அமைந்துள்ளது. எங்கள் ஊரில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சுமார் 2500 பேர் உள்ளனர். இதர முற்பட்ட, பிற்பட்ட வகுப்பினர் 2500 பேர் உள்ளனர். மொத்தம் மக்கள் தொகை 5000க்கு உள்ளது. இதில் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ள காலனி பகுதியானது, தனியாக வெகு தூரத்தில் உள்ளது.

எங்கள் ஊரின் சத்துணவுக் கூடம் ஊரின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. இதனால் தற்பொழுது பல குழந்தைகளும் பயன்பெற்று வருகின்றார்கள். மேலும் காலனி குழந்தைகளும் பயன்பெற்று வந்தாலும் எங்கள் ஊரில் அடிக்கடி சாதிச்சண்டை நடந்துவருவது தவிர்க்க இயலாததாக உள்ளது.

ஊரின் நடுப்பகுதியில் சத்துணவுக்கூடம் அமைந்துவிட்டதால், காலனி பகுதி குழந்தைகளும் கர்ப்பிணிகளும் வருவதற்குச் சிரமப் பட்டு வருகின்றார்கள். எனவே, எங்களுக்கு உடனடியாகக் காலனி பகுதிக்கு எனத் தனியாகச் சத்துணவுக் கூடம் அமைத்துத்தர ஆவன செய்ய வேண்டுகின்றோம்.

— **கிராமவாசிகள்,** பாலூர்
மற்றும் சி. **மண்ணாங்கட்டி**
ஊராட்சி மன்றத் தலைவர்.

**தீர்வு :**

மேற்படி பாலூரில் ஏற்கெனவே ஒரு சத்துணவுக் கூடம் இயங்கி வருகின்றது. மேலும் காலனிப் பகுதிக்கெனத் தனியாக மையம் துவங்குவதற்குத் திட்ட ஒருங்கிணைப் பாளர், சென்னை மூலம் அரசுக்குப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி பெறப்பட்டவுடன் பாலூர் காலனியில் சத்துணவுக் கூடம் அமைத்துத்தரப்படும் என் பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**- கோ. அன்பழகன்,**
மாவட்ட ஊட்டச்சத்து திட்ட அலுவலர்
(பொ) கடலூர்.

**பிரச்சினை :**

**எ**ங்கள் ஊர் ஏரி சுமார் 300 ஏக்கர் சாகுபடி கொண்ட ஏரியாகும். கடந்த 10 ஆண்டுகளாக வறட்சியின் காரணமாக, ஏரி கால்வாய் அனைத்தும் தூர்ந்துவிட்டது. ஆக்கிரமிப்புகளால் அடைத்துவிட்டது. இதனால், தற்போது பெய்த மழையிலும் எங்கள் ஊர் ஏரியில் 10 நாள் கூட நீர் இல்லாமல் வறண்டு கிடக்கிறது. இதை அலுவலர்கள், அரசியல் பிரமுகர்கள் பலரிடம் தெரிவித்தும் பலன் இல்லை. எனவே, தாங்கள் தக்க நடவடிக்கை எடுக்கப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**பார்வதி இராமநாதன்**
மேல் வணக்கம்பாடி, செங்கம் ஒன்றியம்
திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்.

**தீர்வு :**

திருமதி பார்வதி ராமனாதன் குறிப்பிடும் ஏரிக்கான நீர்வரத்து, மேல்செங்கம் மத்திய மாநிலப் பண்ணை அமைக்கப்பட்டுள்ள எல்லைவழியாக, சம்பந்தப்பட்ட ஏரிக்கு வர வேண்டியதாகும். கிராம மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர் கள் நேரில் 24.1.97 சம்பந்தப்பட்ட ஏரிகளைப் பார்வையிட்டு, பண்ணை நிர்வாகத்தின் மற்றும் கிராமத்தைச் சேர்ந்தவர்களுடன் கலந்தாலோசித்து, பண்ணை நிர்வாகத்தினரால் தடைசெய்யப் பட்டுள்ள நீர்வரத்தினைக் கிராமத்தினர் பயன் பெறுமாறு திறந்துவிட உத்திரவிட்டுள்ளார் என் பதைத் தெரிவித்தக் கொள்கிறேன்.

மேலும், ஏரியினை ஒன்றியம் மூலம் தலபாசனத் திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில் சீர்செய்யவும் உத்திரவிடப்பட்டுள்ளது என் பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**–ப. ருத்ரமூர்த்தி,**
**ஆணையாளர்**
**ஊராட்சி ஒன்றியம்,**
**செங்கம்.**

16ஆம் பக்கத் தொடர்ச்சி)

"தெருவுல சண்டை வந்திச்சு. அவரு குடிச்சிட்டு இருந்தாரு. பேச்சுவாக்குல அவர நெட்டித் தள்ளிட்டாரு. அந்த நொள்ள செங் கேணி பாராங்கல்லு மேல உழுந்து மார வலிக்குது மார வலிக்கு துன்னாரு! அதுக்குள்ள போயிடுச்சு."

அவள் சற்று நேரம் திகைத் தாள்.

"வாம்மா போகலாம்."

"தே இரும், நாலு ஊடுதாம். எடுத்துட்டு வந்துடறன்.

"நாளைக்குச் செய்யலாம் வாம்மா."

"அட அவ மோசமானவப்பா, அதிகாரிக்கு சும்மாவாச்சும் எழுதிப் போடுவா; தோ வந்துடறேன். நீ சாப்டாயா, இந்தா!, இத அப்டீ தின்னமேல உக்காந்து சாப்டு."

நான் பசித்து அழுதால், அம்மா ஏதாவது தின்பதற்கு வாங்கிக் கொடுத்து அழுவாள். சின்ன வயதிலோர்ந்து அம்மாவுக்கு அப்படி ஒரு சுபாவம்.


அவள் மடியை அவிழ்த்து இலையோடு இழுத்து திண்ணை மேல் வைத்தாள். பழய சோற்றைப் பிரித்து வைத்து காரக்குழம்பு ஊற்றி இருந்தார்கள். அம்மாவின் மடி ஈரமாக இருந்தது.


"அம்மா இன்னிக்கு அம்மாவாச ஆச்சே, மதியானம் எப்டீம்மா ?"

"அதான்பா புரியல. பேசாம விமலாவை உட்டு தெருவுல சோறு வாங்கச் சொல்ல வேண்டியது தான்."

அவனுக்கு சாவு ஒரு பக்கம் இருந்தாலும் மனதுக்குள் பெருத்த சந்தோசம் ஏற்பட்டது. அமாவாசை கிருத்திகைன்னா பொதுவாக வீட்டில் எல்லோருக்கும் கொண்டாட் டந்தான். மதிய வேலைக்குப் போகும்போது அலுமினிய தாளாவை எடுத்து அதனுள் கிண்ணம் தேக்சாவை போட்டுக் கொண்டு மூடுவதற்காக துணி ஒன்றையும் எடுத்துக் கொள்வாள். மதிய வேலை செய்துவிட்டு மேஸ்திரியிடம் சொல்லிவிட்டு அவ ரவர் மலமெடுக்கும் தெருவிற்குப் போவது போல் அம்மாவும் அம்மா வாசை கிருத்திகைக்கு வீடு வீடாகச் சோறுவாங்க வந்துவிடுவாள். பொழுது நேரம் சாய்ந்து இருட்டத் தொடங்கியதும் நாங்கள் சோற்றுக் காக உட்கார்ந்திருப்போம். அன் றைக்கு அம்மா அரிசி கடன் வாங்கி வந்து ஆக்கமாட்டாள். மறுநாள் குழம்பும் வைக்கமாட்டாள். மீந்த குழம்பைச் சுடவைத்து வைப்பாள். வேண்டும் மட்டும் பரிமாறுவாள். சோற்றில் மீந்ததைத் தண்ணீர் ஊற்றி வைப்பாள்.

தீபாவளி பொங்கல் என்றால் படுகுஷி. தீபாவளிக்கு வேலை செய்யும் இடங்களில் பட்டாசு சத்தம், புதுச் சட்டையும்






சந்தோசமும் நிறைந்து இருக்கும். எனக்கு அவற்றின் மேலெல்லாம் ஆசை கிடையாது. தங்கை கூட அம்மா எப்ப வருவாங்க என்று காத்திருந்து என்னை நச்சரிப்பாள். தெருவில் 'இட்லிகாரம்மா' கிழவி யிடம் வாங்கித் தின்று காலமெல் லாம் வயிறுக்கு மாளாது.

தீபாவளி அன்று அம்மா தெருவில் வாங்கி வரும் இட்லி பூப்பூவாய், பெரியதாய், சில கனத்தும், தடித்தும் விதவிதமாய் இருக்கும். ஜவ் தாளொன்றில் முறுக்கு, அதிரசம், இனிப்பு பலகாரம் என்று ஒரு பக்கம். வடை, குழம்பு, சீசாவில் எண்ணெய், சீயக்காய் பொட்டலம் என்று ஒரு சேர வாங்கி வருவாள்.

கொடுக்க மனம் வராத ஒரு சிலர் புலம்புவார்கள். ஒரு முறை குழம்பு தேக்சாவைத் தூக்கிக் கொண்டு அம்மாவுடன் உதவிக்காக வீடு வீடாக வந்து கொண்டி ருந்தேன்.

"ஏண்டி, கெவர்மெண்ட்டுல உனக்கு சம்பளம் குடுக்கல?"

அந்தப் பொம்பளை அவளை மாதிரியே தடிப்பாய்க் கேட்டாள்.

"குடுக்கறாங்கதான்".

"பின்ன சும்மா எனாம் கேக்க வந்துட்டா?"

"விக்கற வெலவாசி தெரிமா; நாங்க எப்படி பொழைக்க முடியும்?"

அதுக்கு சம்பளம் அதிகமா வேணும்னு அரசாங்கத்துல போராடுங்க."

"நாங்க போராடனா குடுக்க வாப் போறாங்க. போராடிப் பாத்துட்டம். இன்னும் போராடிக் கிட்டுதான் இருக்கிறோம்."

"அங்க உட்டுட்டு, பின்ன இங்க வந்துடற, அமாவாசைக்கு சோறு, கிருத்திகைக்கு சோறு, தீபாவளிக்கு, பொங்கலுக்கு இன்னாதான்...".

"தேம்மா, கஷ்டப்பட்டு உம் பீய காலம் பூறா வார்றமே, நெஞ்சில் எங்கனா ஈரம் இருக்கா உனுக்கு. எங்க வறுமைக்கு உன் கிட்ட பிச்ச எடுக்கறம். இஷ்டம் இருந்தா குடு இல்லாட்டி உடுமா."

"குடுக்கலைன்னா இன்னாடி செய்வ? நாலு நாள் கக்கூஸ் எடுக்க வரமாட்ட; நாறிப் போயிடும்னு பாக்குறியா; எங்க வூட்டுக்காரரு யாரு தெரிமா, அதிகாரிகிட்ட சொல்லி உன் வேலைக்கு ஒலவெச் சுடுவேன் சாக்கிரத."

"தேம்மா, ரொம்பதான் சில்த் துக்காதே. உம் புத்தி உன்னோட வெச்சுக்கோ - காசுக்கு பீத்தின்ற ஆளில்ல நாங்க. எங்க வேலைய நாங்க செய்வோம். அதிகாரி கிதி காரின்னு மெரட்டாத, எங்களுக்கும் சங்கம் இருக்கு."

அம்மாவும் விடாமல் உரிமை யாய்ப் பேசுவாள்.

தீபாவளிப் பலகாரங்களைக் கொண்டு வந்ததும் எனக்கு பஞ்சு பஞ்சாய் உள்ள இட்லியை அழுத் திப் பார்த்து வைப்பாள். கறிக் குழம்பு தனியாய் வாங்கி வந்ததை ஊற்றுவாள். வடை, சாம்பாரோடு வேண்டு மட்டும் பரிமாறுவாள், முறுக்கு பலகாரங்களை அடுக்குப் பானையில் ஜவ்தாள் உறையோடு வைத்து அவ்வப்போது ஒவ் வொன்றாய் எடுத்துத்தருவாள்.

பொங்கலுக்கும் அப்படித்தான். விதவிதமாய்ப் பொங்கல் சோறு வாங்கி வருவாள். எனக்கு இனிப்புப் பொங்கல் பிடிக்காது. தங்கை பிரியமாய் சாப்பிடுவாள். பால் நிறம் போன்ற வெண்பொங்கலை வைத்து சாம்பார் ஊற்றுவாள். பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல் லாவகமாய் இறங்கும். ஊரெல்லாம் தீபாவளி, பொங்கல்னா எங்களுக்கும் இந்தவிதமாய் ஒருவித சந்தோசம்.

நான் அம்மாவை உட்கார வைத்துக் கொண்டு தெருவிற்கு வந்தேன். சைக்கிளை விட்டு இறங் கியதும் சொல்லாமல் கொள் ளாமல் அழுகை பீறிட்டு வந்தது அம்மாவுக்கு. பறையொலி ரொம்ப தூரம் கேட்கும் அளவிற்குக் காதைக் கிழித்தது. அழுது முடிந்து கொஞ்ச நேரத்தில் அம்மா எழுந்து வந்து விமலாவின் காதில் கிசுகிசுத்தாள்.


மாலை முழுவதும் டன் டன்னக்கா. டன் டன்னக்கா பறை யொலி ஆட்டம் பாட்டத்துடன்

ஒலித்தது. மாமாவின் சாவிற்கு உறவினர்கள் வந்த வண்ணம் இருந்தார்கள். மறுநாள் தான் எடுப்பதாய் இருந்தது. அம்மா மட்டுமில்லை, தெருவில் பலர் வேலைக்கு விடுமுறை சொல்லி யிருந்தார்கள்.

பொழுது சாய்ந்து செங்கல் மங்கலாய் இருந்தது. விமலா சோற்றுக் கூடையுடன் வந்ததும் அம்மா அவள் வீட்டிற்குப் போய்ப் பார்த்தாள்.

"இன்னாடீ, சோறு ரவதான் கீது."

'ஏன்கா, நீ இல்லாம சோறே எவளும் தர்ல; இன்னா பேசுறாங்க தெரியுமா, வாயில வந்தத திட்டீட்டு



கெடைச்சத வாங்கியாந்தன்."

அம்மாவுக்குப் பார்க்க பகீர் என்றது. விமலாவைப் பாதி சோறு குழம்பு எடுத்துக் கொண்டு, மீதியை எங்கள் வீட்டில் வைக்கச் சொன்னாள். எனக்கும் தங்கைக்கும் உள்ளுக்குள் ஏராளமான சந்தோசம்.

லோல்பட்டு லொங்கழிஞ்சி அம்மா எங்களைக் காப்பாற்றியதை நினைத்தால் இன்னமும் அதிர்ச்சி யாய் இருக்கிறது. அதிர்ச்சிகள் சில வரலாறு தருவது.

**'தாய்மண்' சிறுகதைத்.. தொகுப்பிலிருந்து...**

**வெளியீடு:**

**விளிம்பு டிரஸ்ட்,**

**கோவை - 641 015**


# தமிழரசு

**அரசு வெளியீடு**

**அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.**

## விளம்பரக் கட்டண விவரங்கள்

| | | தமிழ் மாதம் இருமுறை ரூ. | ஆங்கிலம் மாதம் ஒருமுறை ரூ. |
|---|---|---|---|
| 4வது அட்டை | ... | 8000.00 | 4000.00 |
| 3வது அட்டை | ... | 4000.00 | 2000.00 |
| 2வது அட்டை | ... | 6000.00 | 3000.00 |
| முழுப்பக்கம் (கருப்பு-வெள்ளை) | ... | 2000.00 | 1000.00 |
| அரைப்பக்கம் (கருப்பு-வெள்ளை) | ... | 1000.00 | 500.00 |

தமிழரசு - தமிழ் இதழ் ஆண்டுச்சந்தா ... ரூ. 72.00

தமிழரசு - ஆங்கிலம் இதழ் ஆண்டுச்சந்தா ... ரூ. 36.00

தொடர்ந்து 12 இதழ்களுக்கோ அல்லது அதற்கு மேற்கொண்டோ தமிழரசு இதழ்களில் விளம்பரம் தருபவர்களுக்கு 10% சிறப்புச் சலுகை உண்டு.

விளம்பர பக்க அளவு . . . . . . . . . . . . . . 25 x 20 செ.மீ.

விளம்பர செய்தி அளவு. . . . . . . . . . . . . 23 x 17 செ.மீ.

அரசு ஒப்புதல் பெற்ற விளம்பர நிறுவனங்களுக்கும், தமிழரசு முகவர்களுக்கும் 15% விளம்பரக் கழிவு உண்டு.

மேலும் விவரங்களுக்கு:

**உதவி இயக்குநர்**

தமிழரசு,

அரசினர் தோட்டம்,

சென்னை - 600 002.

தொலைபேசி: 568926
568927

# உணவே மருந்து-மருந்தே உணவு

டாக்டர் சு.கோபலகிருஷ்ணன்

மனிதர்கள் தொழில் புரிவதற்கு வேண்டிய சக்தியைக் கொடுக்கவும், உடலை நிலைபெறச் செய்யவும், உடலை வளர்க்கவும் புசிப்பதே உணவு. இம்மூன்று குணங் களையும் பெற்றிருக்கும் சத்துகள் உணவில் நிறைந்திருக்க வேண்டியதுமின்றி, அவை சீரணமாகி, உடலில் பொருந்தக் கூடியவைகளாயும் இருக்க வேண்டும்.

நம் பெரியோர்கள் அமைத்த உணவுத் திட்டம் மிகச் சிறப்பானதாகும். அவர்கள் சத்துவக்குணத்தை அளிக்கும் பொருள்களையே பெரும்பாலும் உணவாகக் கொண்டார்கள். வைட்டமின்கள், புரோட்டீன் கார்போஹைட்ரேட் ஆகிய பல உணவுச்சத்துகளைப் பற்றி அவர்கள் கூறாவிடினும் ''நெய்கலந்த பருப்பு அன்னத்தை ஒரு பிடி உண்ண ஒருபிடி சதை வளரும்'' என்று அறிந்து கூறினார்கள்.

சீரணிப்பதற்குக் கடினமாக புரோட்டீன் சத்தை அதிகமாகப் பெற்றிருக்கும் வாயுப் பொருள்களாகிய பருப்பு வகைகளைக் காலையிலும் கார்போ ஹைட்ரேட் வைட்டமின் இவைகளை அதிகமாகப் பெற்றிருக்கும் மந்தப் பொருள் களாகிய அரிசி, தயிர், கிழங்கு, கீரை, பழம் இவைகளை மத்தியானத்திலும், எளிதில் செரித்து உடலில் பொருந்தக்கூடிய விலங்கு புரோட்டீன் முதலிய பலவகைச் சத்துக்களைப் பெற்றுள்ள மந்தமில்லாப் பொருள்களாகிய பசும்பால், அன்னம், இளங் காய்கறிகள் இவைகள் இரவிலும் உண்ணும் படியான நியதிகளை முன்னோர்கள் வகுத்து, கடைப்பிடித்து வந்துள்ளனர்.

இப்படி சிறுபொழுதுக்கு ஏற்ற படி உண்பது உடலுக்கு உகந்த முறையாகும்; விஞ்ஞானப்படியும் சிறந்ததாக ஏற்றுக்கொள்ளத் தக்கதாகும்.

ஒவ்வொரு உணவுப் பொருளிலும், உணவுத்தன்மை மட்டுமின்றி வேறு குணங்களும் - நோயை உண்டாக்கும் தீக்குணங்களும், நோயைப் போக்கும் நற்குணங்களும், அமைந்திருக்கின்றன. உதாரணமாகப் புது அரிசி அன்னம், அசீரணம், பேதி இவைகளை உண்டாக்குகிறது. எனவே, பொருள்களின் குணங்களை உணர்ந்து அவைகளின் தீக்குணங்களை நீக்குவது அவசியம், என்பதோடு அப்படி நீக்குவதற்கான சில வழிகளையும் காட்டியுள்ளனர். உணவுப் பொருட்களில் சுவை உண்டு. உணவில் சுவை என்பது ஊட்டந்தரும் பகுதியின் இயற்கை அடையாளமாகும். சுவையில் அறு சுவைகள் உண்டு. நாம் உண்ணும் உணவின் அறு சுவைகளும் கலந்து இருக்குமாறு பார்த்துப் பாகம் செய்யப் படுகிறது.

இவ்வாறு அறுசுவை உணவு உண்பதுதான் உடலுக்கு ஏற்றதாகும். உடலின் வளர்ச்சிக்கும், சக்திக்கும் ஏற்றவகையில் துணை செய்வது சுவைகளே.

ஒவ்வொரு - சுவைக்கும் தனித்தனிக் குணங்கள் உண்டு.

துவர்ப்புச் சுவை -
ஆற்றலைத் தரும்

கார்ப்புச் சுவை - வீரத்தைத் தரும்.

இனிப்புச் சுவை - வளத்தைத் தரும்.

உவர்ப்புச் சுவை- தெளிவைத் தரும்

கைப்புச் சுவை -
மென்மையைச் சேர்க்கும்

புளிப்புச் சுவை -
இனிமையைத் தந்து உடலை அழகுறச் செய்யும்.

பசி ஏற்படுவது என்பது முன் உண்ட உணவு, முற்றும் செரிமானமாகிவிட்டது என்பதை உணர்த்தும் நிலையாகும். இரு மலங்கள் (மலம், சிறுநீர்) கழிந்து குடலிலுள்ள வாயு முற்றும்

வெளிப்பட்டு, உள்ளந்தெளிந்து, ஐம்பொறிகள் தூயநிலையடைந்து, முக்குற்றங்கள் தன்னிலையில் பொருந்தி, உடல் இலேசத்துவம் பெற்றிருந்தால், முன்உண்ட உணவு, முற்றும் செரிமானமாகிவிட்டது என்பதை அறியலாம். அப்பொழுது பசி தோன்றும்.

இங்ஙனம் முன் உண்ட உணவு, முற்றும் சீரணித்ததை அறிந்து, பின் உணவு கொள்பவர்க்கு மருந்துண்ண வேண்டிய அவசியம் ஏற்படாது என்பதை-

**"மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய**
**தற்றது போற்றி யுணின்"**

- என்னும் குறட்பாவால் அறியலாம்,இன்னும் திருவள்ளுவர் –

**"அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல**
**துய்க்க துவரப் பசித்து"**

- எனக் கூறியபடி நல்ல பசி தோன்றியபின்தான், உணவு கொள்ள வேண்டும். உடலிற்கும் காலத்திற்கும் ஏற்ற அறுசுவைகளுடன் நன்றாகப் பாகம் செய்த உணவை அளவுடன் அருந்த 6 மணி நேரத்தில் முற்றிலும் சீரணமாகும். செரிமானக்காலத்தில் வேறு ஏதேனும் உட்கொண்டாலும் பானம் பருகினாலும் அசீரணம் ஏற்படும். தினம் மூன்று வேளை உணவு உட்கொள்ளலாம் என இருப்பினும், முன்னோர் கூற்றுப்படி இருவேளைதான் உட்கொள்ள வேண்டும், என்பதை

**"உண்பதிரு பொழுதொழிய மூன்று பொழுதுண்ணா"** என்பதால் அறியலாம்.

வயோதிகர்களுக்குச் சீரண சக்தி குறைவாக இருக்குமாதலால் இவர்கள் ஒருபொழுது உண்ணப்பயிற்சி செய்து கொள்வது நலம். யோகிகளும் சத்துவக்குணத்தை அடையும் பொருட்டு, ஒரு பொழுதுதான் உண்ணவேண்டும்.

உணவை அளவுடன் உண்ணுதல் வேண்டும். இதனால் நெடுநாள் வாழ இயலுமா; இதை-

**"அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு**
**பெற்றா னெடிதுய்க்கு மாறு"**

-என்ற குறட்பாவால் அறியலாம்.

உணவு, பசிக்கு ஏற்றவாறு கொள்ளுதல் வேண்டும்.

நாம் உணவாகக் கொள்ளக் கூடிய பொருட்கள்அனைத்தும், தாது, தாவர, சீவப் பொருட்கள் என்ற மூன்று வகையினுள் அடங்கும்.

**தாதுப் பொருட்கள்**

உடலுக்குத் தேவையான உலோக உபரச காரசாரப் பொருள்களாகிய தாதுப் பொருள்களுடைய சத்துகள், நாம் உண்ணும் தாவர விலங்கு உணவுகளில் போதுமான அளவு இருப்பதால், தாது பொருட்களை பாகம் செய்து உணவாகக் கொள்வது அவசியமில்லை.

**தாவரப் பொருள்கள்**

தாவரப் பொருள்களே நமது உணவிற்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவை மரம், செடி, கொடி, புல் என நான்கு வகைப்படும். இவைகளின் கிழங்கு, தண்டு, கீரை, பூ, காய், பழம், வித்து முதலிய பல உறுப்புகளும் உணவாகின்றன. இவைகளுள் புல் இனத்தைச் சேர்ந்த பயிர் தானியங்களே பிரதான உணவாக இருந்துவருகின்றன.

இவை, சிரமமின்றி எளிதில் செரிக்கக் கூடியதாக உள்ளன. இவற்றில் நெல், கோதுமை, கம்பு, கேழ்வரகு, சோளம் வரகு, தினை ஆகியவை முக்கியப் பயிர் தானியங்களாகும். தென்னிந்தியாவில் அரிசியும், வட இந்தியாவில் கோதுமையும் பிரதான உணவுதானியங்களாக உள்ளன.

**விலங்குப் பொருள்கள்**

விலங்குப் பொருள்களில் நடப்பன, பறப்பன, நீர்வாழ்வன என்ற மூன்று செயலைக் கொண்டவற்றை மட்டும் உணவிற்காகப் பயன்படுத்துகிறோம்.

இவைகளின் பால், இறைச்சி ஆகியவற்றினை மட்டுமே உணவாகக் கொள்கிறோம்.

பண்டையத் தமிழ் மக்கள் அன்றாட உணவு முறைகளில் கடைப்பிடித்து வந்த பழக்கங்களே அவர்கள் திடமாக நீடித்த ஆயுளுடன் வாழ்ந்ததற்குக் காரணம் என்பர். இயற்கையாகக் கிடைக்கக் கூடிய கீரை, காய், கனி மற்றும் சில தாவரப் பொருட்களைத் தேவையான அளவிற்கு உண்டு வாழ்கின்றபோது, நோய் நம்மை நெருங்குவதில்லை. மனித சமுதாயம், உய்வதற்கு வழி தேடும் வகையில் பண்டைய சித்தர்கள், மூலிகைகளின் வகைகளைக் கூறி, அதன் நோய் தீர்க்கும் தன்மைகளை விளக்கமாகக் கூறியுள்ளார். அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்தும் தாவரப் பொருட்களில்

சிலவற்றின் வகை, குணம், பயன்களைப்பற்றி இனி ஆராயலாம்.

**மிளகு**

மிளகு - வாத, பித்த, கர்பக் குற்றங்கள் ஆகிய அனைத்தையும் நீக்கும். அன்றியும், திமிர், வாதம் முதலியவைகளை அகற்றும். மிளகுத் தூளை 260 முதல் 390 மி.கி. கொடுக்க பசியைத் தூண்டும். வெப்பத்தை உண்டு பண்ணி மனவெழுச்சியை உண்டாக்கும்.

**சீரகம்**

இதனால் பித்தம் தீரும். வயிற்றுவலி, ஈரல் நோய், குருதிக் கழிச்சல், இரைப்பு, வாதநோய்கள் தீரும். உடலுக்கு வலிமை தந்து, கண்ணுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும். சீரகத்துடன் நாட்டுச் சர்க்கரையுடன் விடாது உண்டுவர, தேகம் வன்மை பெறும்.

**சுக்கு**



சுக்கினால் செரியாமை, புளியேப்பம், வயிற்றுப்புசம், குன்மம், கழிச்சல், இருமல் தீரும். சுக்கு, கற்கண்டு சம அளவு எடுத்து, இரண்டையும் பொடிசெய்து, சிட்டிகையளவு காலை, மாலை இருவேளை இளநீரில் கொடுத்தால் நெஞ்சு வலியும், மேல் மூசசும் நீங்கும்.

**பெருங்காயம்**

இதனால் வயிற்று நோய்கள், மாந்தம், குன்மம், பெருவயிறு நோய்கள் நீங்கும். தேக நோய்கள், பல்நோய், கப நோய்கள் தீரும். பிள்ளை பெற்றபின் அழுக்கு வெளியேற காயத்தைப் பொரித்து வெள்ளைப்பூண்டு, பனை வெல்லத்துடன் சேர்த்துக் காலை வேளை தோறும் கொடுக்கலாம்.

**இலவங்கம்**



இது மயக்கம், பேதி, வாந்தி, குருதிக் கழிச்சல், செவிநோய், கண்ணில் பூ ஆகியவற்றை நீக்கும். கிராம்பை நீர்விட்டரைத்து, நெற்றியிலும், மூக்குத் தண்டின் மீதும் பற்றிடத் தலைபாரம், நீரேற்றம் குணமாகும்.

**இலவங்கப்பட்டை**

இது இரைப்பு, இருமல், வயிற்றுநோய்களைப் போக்கும். உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும். சிலந்தி, பாம்புக்கடி நஞ்சினைப் போக்கும். சீதக் கழிச்சலுக்குக் கொடுக்க நல்ல பலனைத் தரும்.



**மஞ்சள்**

உடலில் பூசிக்குளிக்க உடலுக்குப் பொன்னிறம் தரும்.



புலால் நாற்றத்தை நீக்கும். பசியை உண்டாக்கும். வாத பித்த, கப குற்றங்களை நீக்கும். தலைவலி, நீரேற்றம், மூக்கு நீர் பாய்தல் இவை போகும். வேப்பிலையுடன் மஞ்சளைச் சேர்த்தரைத்து, அம்மைக் கொப்பளத்தின் மீது பூச - அவை பழுத்துடைவதன்றி, வெகு எளிதில் ஆறிப்போகும்.

**வெந்தயம்**

சீதக் கழிச்சல், வெள்ளை, குருதியழல் நோய், வெள்ளை, கணக்காய்ச்சல், எலும்பைப் பற்றிய சுரம், நீர்வேட்கை

இவைதீரும். கஞ்சியில் சேர்த்துக் காய்ச்சிக் கொடுக்கப் பால் சுரக்கும். இதனை அரைத்துத் தலையில் தேய்த்து ஊற வைத்துத் தலை முழுகிவர, மயிர்வளரும். தவிர மயிர் உதிர்ந்து போவதைத் தடுக்கும்.

**சோம்பு**

செரியாமை, வயிற்றுப்புசம், வயிற்றுவலி, சுரம், இருமல், இரைப்பு, மூக்குநீர் பாய்தல் ஆகியவை நீங்கும். வாலையிலிட்டு வடித்து எடுக்கப்படும் சோம்பு நீர் மேற்கூறிய நோய்களைப் போக்கும்.

**கறிவேப்பிலை**

இலையை நிழலிலுலர்த்தி, இத்துடன் மிளகு, உப்பு, சுக்கு, சீரகம் முதலியவற்றைப் பொடியாக்கிச் சோற்றில் கூட்டி கொஞ்சம் நெய்விட்டுக் கலந்து உண்ண, மாந்தம், போன்றவை நீங்கும்.

**எலுமிச்சை**

இதனால் தீக்குற்றத்தால் உண்டான நோய்களும், வாந்தி, வாய்க்குமட்டல், நீர்வேட்கை, மயக்கம், வெறிநோய்களும் தீரும். இப் பழரசத்தோடு குளிர்ச்சியையும் கொடுக்கும். இதன் இலையைக் காடியிலிட்டு நீராகாரமாகப் பருகுவது நமது நாட்டுப் பழக்கம்.

**ஏலம்**

இது இருமல், கழிச்சல் கோழை, நீர்ச்சுருக்குப் போன்ற நோய்களை நீக்குவதோடு தொண்டை, வாய், கீழ்வாய் இவைகளில் உண்டாகும் பிற நோய்களையும் நீக்கும். ஏலக்காய், பனைவெல்லம் சேர்த்து, நீர்விட்டுச் சுண்டக் காய்ச்சிக் கொடுத்தால் பித்தத்தால் உண்டாகும் தலைமயக்கம் நீங்கும்.



**ஓமம்**


இதனால் செரியாமாந்தம், பொருமல், கழிச்சல், இருமல இரைப்பு, கபசுரம், பல்நோய் இவைகள் நீங்கும். ஓமம் , சுக்கு, சித்திரமூலவேர்ப்பட்டை இம் மூன்றும் சமஅளவு எடுத்து, பொடித்து, ஒன்றாகக் கலந்து, மொத்த எடைக்குக் கடுக் காய்ப்பொடி சேர்த்து மூன்று வேளை மோரில் கலக்கிக் கொடுக்க மந்தம் தீரும்.

**கடுக்காய்**

இது பசித்தீயைத் தூண்டி, செரிப்பிக்கச் செய்து உடற் கட்டுகளுக்கு வன்மை தந்து, முதுமை வரவிடாமல் தடுக்கும். அறிவையும், ஆற்றலையும் பெருக்கும். எனவே இது காயகற்பப் பொருளாகக் கொள்ளப்படுகிறது. தோடங்கள் தங்கிய இடங்களிலிருந்து அவைகளை வெளிப்படுத்துதல், குடலிலுள்ள இயற்கைச் சக்தியைத் தூண்டி பலத்தை வெளிப்படுத்துதல், இவற்றைச் செய்யும். இவைகளன்றி, கன்னம், கழுத்து, நா, ஆண்குறி இவ்விடங்களில் தோன்றும் நோய்கள், காலடிப் புற்றுநோய், காமாலை, தாது, தாவர சங்கமவிடங்கள் இவை நீங்கும். கடுக்காயைத் துவையல் செய்து சாப்பிட மலத்தைக் கட்டும். ஒவ்வொரு நாளும் காலைதோறும் கடுக்காயை ஓராண்டு சாப்பிட்டுவர, நரை திரை மாறும். பச்சைக் கடுக்காயைப் பாலில் அரைத்துச் சாப்பிட இருமல் நீங்கும்.

**நெல்லிக்காய்**

நெல்லிக்காயைப் பகலில் உண்ண கபநோய், வாந்தி,



வெறிநோய், மயக்கம், மலக்கட்டு, தலைச்சுற்று இவை தீரும். இதைத் துவையல் செய்து சாப்பிட சுவையின்மை, வாந்தி ஆகியன போக்கும். இதைக் கொண்டு செய்யப்படும் லேகியம் உடல்வன்மைக்கு மிகச் சிறந்தது.

**துளசி**

துளசியால் கபநோய், சுரநோய் என்பன நீங்கும். பித்தத்தால் ஏற்படும் வெறிநோய் தணியும். கருந்துளசியால் இருமல், இரைப்பு, நெஞ்சில் ஏற்படும் கபம், மார்புச் சளி, வயிற்றுப்


புழு, தலை நஞ்சு முப்பிணி இவை அகலும். இதைப்



பாலிலிட்டுக் காய்ச்சிப் பருக, உடலிலுண்டாகும் குற்றங்கள் விலகும். கபத்தை விலக்கும். இதை நீரில் போட்டுக் காய்ச்சி ஆவி பிடித்தால் கபநோய்கள் தீரும்.

**வல்லாரை**

வாய்ப்புண், குருதிக்கழிச்சல், குருதிக்கழிச்சலால் உண்டாகும்,



வயிற்றுக் கடுப்பு, தொண்டைக்கமரல், சுரம், வீக்கம், யானைக்கால், நெரிக்கட்டி, மேகப்புண், கண்டமாலை, சூதகக் கட்டு, விரைவீக்கம் ஆகியன தீரும். வல்லாரையிலைச் சாற்றில், சிறிது உப்பு, சாதிப்பத்திரி சேர்த்துக் கொடுக்க வல்லைநோய், பெருவயிறு முதலிய நோய்கள் நீங்கும்.

**கீழ்க்காய் நெல்லி**

கீழா நெல்லியால், வயிற்று மந்தம், காமாலை, குருக்கழிச்சல், தாதுவெப்பம், நாட்பட்ட மேகப்புண், பித்த மிகுதியால் தோன்றும் நோய்கள், கண்ணில் காணும் நோய்கள், நாவறட்சி என்பன தீரும். இலையை உப்பு சேர்த்தரைத்துப் பூச சொறி, சிரங்கு போகும். கீழாநெல்லியை அரைத்து, நல்ல பசுவின் தயிரில் கலந்து உண்ணக் காமாலை நோய்கள்



குணமாகும்.

**ஆடாதோடை**

வாத, கபக்குற்றங்களின் பெருக்கைக் குறைக்கும். பலவிதமான சுரம், இருமல், இரைப்பு, விக்கல், குருதியழல், முப்பிணி, வயிற்று நோய், சூலை, இவைகளைப் போக்கும். நல்ல குரலொலியைத் தரும். இலையை உலர்த்தி, சுருட்டாகச் சுருட்டி புகை பிடிக்க இரைப்புநோய்தீரும். பூவை வதக்கி இரு கண்களின்மீதும் வைத்துக்கட்ட கண்நோய்கள் தீரும்.

**முருங்கை**

முருங்கை இலையினால் மந்தம், தலைவலி, கண்நோய், வெறிநோய், மூர்ச்சை முதலிய நோய்கள் குணமாகும். முருங்கையிலைச் சாற்றை இரு துளிகள் கண்ணில் விட்டுவர கண்வலி நீங்கும். இதனையே தேனுடன் சேர்த்து கண்மை போன்று கண்ணிமைகளில் போடலாம். இலையும், மிளகும் சேர்த்து நசுக்கி, சாறெடுத்துத் தலைவலிக்கு நெற்றியில் தடவலாம். இலையை அரைத்து வீக்கங்களின் மீது பற்றிடலாம். பட்டையைச் சிதைத்து, வீக்கங்கள், கட்டிகள் இவற்றின் மீது வைத்துக் கட்டலாம். வேரை அரைத்து கடுகுத்தூள் சேர்த்து நீர்விட்டரைத்து கீல்வாயு, வீக்கங்களுக்குப் பற்றிட வீக்கம் குறையும்.

மேற்கூறியவற்றில் இருந்து உலகின் மூத்த முதல் மருத்துவ முறையாகத் தோற்றம் பெற்றிருக்கும் **"தமிழ் மருத்துவம்"** தனக்கெனக் கொண்டிருக்கும் தனி பாணி **"உணவே மருந்து மருந்தே உணவு"** என்பது தெளிவாகிறது. ஆகவே, நாம்

**"அளவுக்கு மிஞ்சினால்**
**அமிர்தமும் நஞ்சு"**

-என்ற பழமொழியைக் கருத்தில் கொண்டு

**"அற்றா ளவறிந்து உண்க அஃதுடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்கு மாறு"**

- என்ற குறளின் வழிநின்று,

உணவு முறைகளைக் கொண்டு நோயின்றிப் பல்லாண்டு வாழலாம், என்பதனையும், தேவைப்படின் அந்த உணவுப் பொருட்களையே, மருந்தாக அளவில் மாற்றம் செய்து உண்டு-நோய் நீங்கி நல்வாழ்வு வாழலாம் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி ஆகும்.



# வறுமை ஒழிப்பு மற்றும் வேலை வாய்ப்புத் திட்டங்கள்

ஊராட்சி ஒன்றியங்கள்- ஊரக வேலைத் திட்டங்கள், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், சாலை வசதி செய்தல், குடிநீர் வசதி. செய்தல் போன்ற பணிகளைச் செய்து வந்தன. ஊராட்சி ஒன்றியத்தின் அன்றாட நிர்வாகப் பணிகள் ஆணையரால் கவனிக்கப்பட்டு வந்தன. பின்னர் அவ்வப்போது பல புதிய வளர்ச்சித் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டு ஊராட்சி ஒன்றி யங்கள் மூலமாகச் செயற்படுத்தப் பட்டன. 1980ஆம் ஆண்டு முதல் வறுமை ஒழிப்புத் திட்டங்கள், வேலை வாய்ப்புத் திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டன. இந்தப் புதியதிட்டங்களை முனைப்புடனும் உரிய கவனத்துடனும் செயல் படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்திட்டங்கள் கூடுதல் ஆணையர்கள் மூல மாகச் செயல்படுத்தப்பட்டன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் திலும் ஆணையாளர் பொது நிர்வாகத்தையும், கூடுதல் ஆணையாளர் வளர்ச்சிப் பணி களையும் கவனித்து வந்தனர். கவனிக்கும் பணிகள் விவரம் வருமாறு:

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், மில்லியன் கிணறு திட்டம், வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (ஐ.ஆர்.டி.பி.), கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம், மகளிர் குழந்தை நல மேம்பாட்டுத திட்டத்தின் கீழ், குழந்தை நலப் பாதுகாப்புத் திட்டம், மகளிர் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தகவல் கல்வி தொடர்பு திட்டப்பணிகள், தேசிய கரிம வாயு மேம்பாட்டுத் திட்டம், தேசீய மேம்படுத்தப்பட்ட சூளா (அடுப்பு) திட்டம் ஆகியவைகளே அப்பணிகள்.

### ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்

1989ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகியவை களை இணைத்து, ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் அமல்படுத்தப் படுகின்றன.

### திட்டத்தின் நோக்கம்

கிராமப்புறத்தில் வேலைவாய்ப் பற்றவர்கள் மற்றும் போதிய

வேலை இல்லாதவர்களுக்குக் கூடுதலாகப் பயனுள்ள வேலை வாய்ப்பை உருவாக்கவும், கிராமங்களில் சமுதாயச் சொத்துக்களை உருவாக்கவும், கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இத்திட்டம் செயல் படுத்தப்படுகிறது.

### நிதி

இதற்கான நிதியை மைய அரசு 80 சதவிகிதம், மாநில அரசு 20 சதவிகிதம் என்ற அடிப்படையில் வழங்குகின்றது.

### திட்டங்கள்

1995-96 வரை இத்திட்டத்தில் இந்திரா நினைவுக் குடியிருப்புகள், ஜவகர் வேலைத் திட்டப் பணிகள், மில்லியன் கிணறு திட்டம் இவைகளைச் சேர்த்து ஒரே திட்டமாகச் செயல்பட்டு வந்தது. 1996-97 முதல் இவை மூன்றும் தனித்தனித் திட்டங்களாகச் செயல்பட்டுவருகின்றன.

ஜவகர் வேலைத் திட்டம் ரூ.157.05 கோடி.

இந்திரா நினைவுக் குடியிருப்புகள் ரூ.100.23 கோடி.

மில்லியன் கிணறு திட்டம் ரூ.39.25 கோடி.

### இந்திரா நினைவுக் குடியிருப்புகள்

இத்திட்டத்தில் 1996-97ல் ஆதிதிராவிடர்களுக்கு 60,000 வீடுகளும் மற்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 11,598 வீடுகளும் கட்டப்படுகின்றன. சென்ற ஆண்டு வரை ஒரு வீட்டிற்கு ரூ.14,000 என மத்திய அரசு நிர்ணயித்ததை இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் ரூ.20,000 என உயர்த்தியுள்ளனர். கரிசல் மண் மற்றும் மலைப்பகுதியில் ஒரு வீட்டிற்கு ரூ.22,000 அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் மாநில அரசு 20% பங்குத் தொகையுடன் சிமெண்ட் கான்கிரிட் கூரை அமைக்க ரூ.7,000 வீதம் கூடுநலாக வழங்குகின்றது. இத வீடு கட்ட வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பயனாளிகளுக்கு அவர்கள் பெயரில் பட்டா அல்லது அரசால் ஒதுக்கப்பட்ட வீட்டுமனை இருக்க வேண்டும். கூரை செலவினம் நீங்கலாகப் பிற பணிகளுக்கு இந்த ஆண்டு ரூ.100.23 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தில் பொதுச் சொத்து உருவாகும் வகையில் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படும் பணிகள்:

ஆரம்பப் பள்ளிக்கட்டிடம், ஊராட்சி மன்றக் கட்டிடம், சத்துணவு மையக்கூடம். சீரமைக்கப்பட்ட பொது விநியோகக் கட்டிடம், பால் நுகர்வோர் உற்பத்தியாளர் சங்கக்கட்டிடம், தொலைக்காட்சி அறை, இணைப்புச் சாலைகள், மயானச் சாலைகள், ஆதிதிராவிடர் குடியிருப்பு இணைப்புச் சாலைகள்.

இதுவரை இத்திட்டத்தில் வழங்கும் நிதியில் 80% ஊராட்சிகளுக்கும் 20% மாவட்ட ஊரக முகமைக்கும் பிரித்து வழங்கப்பட்டதை இந்த ஆண்டு 1996-97 முதல் ஊராட்சிகள் 65%, ஊராட்சி ஒன்றியம் 15%,மாவட்டம் 20%என பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதில் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்குப் பயன் படக்கூடிய வகையில் 22 1/2% ஒதுக்கப்பட வேண்டும்.

### மில்லியன் கிணறு திட்டம்

இத்திட்டத்தில் ஆதிதிராவிடர் மலைவாழ் மக்கள் மற்றும் இதர நலிந்த பிரிவினரில் சிறு/குறு விவசாயிகளுக்கு அவர்களின் தனிப்பட்ட பெயரிலோ அல்லது இரண்டு அல்லது மூன்று பயனாளிகளின் பெயரில் கூட்டாகவோ, குறைந்தது ஒரு எக்டேர் நிலம் இருந்தால் ஒரு பாசனக்கிணறு வெட்ட அதிகபட்சம் ரூ.48,000 வரை நிதி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வெட்டப்படும் கிணறுகளுக்குப் பம்புசெட் பொருத்த மான்யத்துடன் கூடிய கடனும், மின் இணைப்பும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு இத்திட்டத்திற்கு ரூ.39.25 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது.

1.10.1996 முதல் கிணறுகள் வெட்ட முடியாத இடங்களில் மொத்தக் கிணறுகளில் 50 வரை ஒரு கிணற்றிற்கு அதிகபட்சம் ரூ.35,000 வரை மானியம் அளிக்கும் வகையில் ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்டவர்களுக்கு மேலே கூறப்பட்ட விவசாய மேம்பாட்டுத் திட்டம் தவிர - சிறுபாசன ஏரிகள், நிலவள மேம்பாடு, ஊரகக்குளம், ஊரணி, குட்டை கோவில் குளங்கள், கசிவு நீர்க்குட்டை போன்ற பணிகளை மேம்படுத்தி அடிமட்ட நீர் ஆதாரங்களைப் பெருக்கவும் இத்திட்டத்தில் செயல்படுத்தப்படுகிறது.

### வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

#### திட்டத்தின் நோக்கம்:

கிராமங்களில் வேலை செய்யக்கூடிய நிலையிலுள்ள விவசாயப் பணியாளர்களுக்கு விவசாயப் பணிகள் இல்லாத நாட்களில் ஒரு குடும்பத்தில் இரண்டு பேருக்காவது ஆண்டுக்கு 100 நாட்கள் ஆதாயம் உள்ள வேலை வாய்ப்பினை அளிக்கவும், பயனுள்ள உள்ளமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் சமுதாயச் சொத்துக்கள் ஏற்படுத்தவும் செயல்படுத்தப்படுகின்றது.

#### நிதி

இத்திட்டத்திற்கு மைய அரசும் மாநில அரசும் 80:20 விகிதத்தில் நிதி அளிக்கின்றன.

#### திட்டங்கள்

இத்திட்டம் தமிழ்நாட்டில் 24 மாவட்டங்களில் 198 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகின்றது.

இத்திட்டத்தில், நீர் மற்றும் நிலவள மேம்பாடு 40% சிறுபாசன ஏரி, குளங்கள் பணிகள் 20%, சாலைப் பணிகள் 20%, பள்ளிக் கட்டிடம் குழந்தைகள் காப்பகம் 20% எனப் பிரிக்கப்படும்.

இத்திட்டத்தில் வேலை தேவையென்று கோரும் கிராம மக்கள் (18 வயது முதல் 60 வயதுக்குபட்டவர்) குடியிருக்கும் ஊராட்சி அலுவலகத்தில் விண்ணப்பித்துப் பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்தவர்களுக்குக் குடும்ப அட்டை வழங்கப்படும்.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஆண்டு வருமானம் ரூ.11,000-க்குக் கீழ் வாழும் ஏழை மக்களின் வருமானத்தைப் பெருக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் சொத்துக்களை உருவாக்க, அரசு மானியம் மற்றும் வங்கிக்கடன் வழங்கப் படுகிறது.

இத்திட்டத்தினால், கிராமங்களில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள், விவசாயக் கூலிகள் ஆகியோர் பயனடைகின்றனர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், ஊனமுற்றோர் ஆகியோர்களுக்கு 50% அரசு மான்யமும் குறு விவசாயிகள், விவாசாயக் கூலிகள் மற்றும் கிராமக் கைவினைஞர்ளுக்கு 33 1/3 விழுக்காடு மான்யமும், சிறு விவசாயிகளுக்கு 25%மான்யமும் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிட மக்களுக்கு அதிகபட்சமாக ரூ.6,000 அரசு மானியம் வழங்கப்படுகிறது. ஏனையோருக்கு வறட்சிப்பகுதியில் ரூ.5,000மும், பிற பகுதிகளில் ரூ.4000மும் மானியம் வழங்கப் படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் 50 விழுக்காடும், பெண்கள் 40 விழுக்காடும், உடல்



ஊனமுற்றவர்கள் 3 விழுக்காடும் பயனடைகின்றனர். மாவட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் 25 விழுக்காடு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையின் பேரில் வழங்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள், ஆடுகள் வளர்ப்பு வண்டி மாடுகள், உழவு மாடுகள், மளிகைக்கடை, டீ கடை, பொம்மை செய்தல், மண்பாண்டம் செய்தல், தச்சுத் தொழில், ரெடிமேட் ஆடைகள் தயாரித்தல் ஆகிய இனங் களுக்கு மானியம் மற்றும் கடன் வழங்கப்படுகிறது. ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக் குரிய மானியம் 31.3.96 வரை வங்கிகளுக்கு நோடல் வங்கிகள் மூலம்முதலிலேயே கொடுக்கப் பட்டன. இவ்வாறு செய்வதன் மூலம் சில வங்கிகளில் மானி யத்தை மட்டும் கடனாகக் கொடுத்துவிட்டு, வங்கிக் கடனைக் கொடுக்காமல் உள்ளனர். இதைத் தவிர்க்கும் பொருட்டு 1.4.96 முதல் பயனா ளிக்குரிய மானியம் பின்முனை மான்யமாக வழங்கப்படுகிறது. இதன்படி, வங்கியில் பயனாளிகள் பெயரில் மானியம் சேமித்து வைக்கப்படுகிறது. 1996-97 ஆம் ஆண்டு இம் மாநிலத்தில் இத்திட்டம் ரூ.75.37 கோடி மான்யத்துடன் செயல்படுத்தப்படு கிறது.

### கிராமப் புற இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், கிராமப்புற வேலையற்ற இளைஞர்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட தொழில்களில், தொழில் நுட்பப் பயிற்சி அளித்து அவர்களின் தொழில்நுட்பத் திறமையை வளர்த்து, சுய வேலைவாய்ப்பு அளிக்கச் செய்வதேயாகும். இத்திட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பத்தில் இருந்து 18 வயது முதல் 35 வயது வரையுள்ள இளைஞர்கள் தேர்ந்தெடுக் கப்பட்டு அவர்களுக்கு, ஆர்வ முள்ள தொழில்களில் பயிற்சி, அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி மையங்கள் மூலமாகவும், தொழில் நுட்ப வல்லுநர் மூலமும், வழங் கப்படுகிறது. பயிற்சிக் காலம் 3 மாதம் முதல் ஓர் ஆண்டுக் காலம்வரை ஆகும். அங்கீகரிக் கப்பட்ட பயிற்சி மையங்களில் பயிற்சி பெறும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் பயிற்சியின் போது மாதம் ஒன்றுக்கு ரூ.350 பயிற்சித் தொகையாகவும் மற்றும் ரூ.800 பெறுமான இலவச உபகர ணங்களும் வழங்கப்படுகிறது. தொழில் வல்லுநரிடம் பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ.200 பயிற்சி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், தொலைக் காட்சி மற்றும் ரேடியோ பழுதுபார்த்தல், கம்ப்யூட்டர், இருசக்கர வாகனம், மின்சார ஒயரிங் மற்றும் மோட்டார் பாழுதுபார்த்தல், தையல் மற்றும் எம்பிராய்டரி தொழில்கள், பாய் பின்னுதல், ஒலைப்பெட்டி முடைதல், மோட்டார் ரீவைண்டிங், கயிறு திரித்தல், காளான் தயாரித்தல், கைப்பை தயார் செய்தல் போன்ற தொழில் களுக்கும் பயிற்சி அளிக்கப் படுகிறது.

### ஊரகப் பெண்கள், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் ஓர் உட்பிரிவாக இத்திட்டம் செயல் படுகிறது. இத்திட்டம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப் புறப் பெண்களின் பொருளாதார நிலைமை உயர, நிலையான சுயவேலைவாய்ப்பினை உரு வாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒரு குழு அமைப்பாளரைக் கொண்டு ஒன்றுபட்ட அக்கறையுடைய 10 முதல் 15 பெண்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்படும்.

ஒவ்வொரு குழுவிற்கும் ஒட்டுமொத்த நிதியாக ரூ.25,200 வழங்கப்படுகிறது. இத்தொகையை மைய அரசும், மாநில அரசும் சம விகிதத்தில் பகிர்ந்துகொள் கின்றன.

சாத்தியக்கூறுள்ள அனைத் துப் பொருளாதார நடவடிக்கை களை இக்குழுக்கள் மேற் கொள்ளலாம். இக்குழு கிராமப் புறப் பெண்களின் வருமானத் தைப் பெருக்கிக் கொள்ளத் தடையாக இருப்பவற்றை நீக்கி எளிமைப்படுத்தும்.

### குழந்தைகள் பராமரிப்பு நடவடிக்கைகள்

இத்திட்டம் ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்



இத்திட்டத்திற்காகும் செலவினை மைய மற்றும் மாநில அரசுகள் 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. ஒரே தவணை உதவியாக ஒரு குழு ரூ.15,000 உதவி பெறத் தகுதி உடையதாகும்.

## செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு

1995-96 ஆம் நிதியாண்டில் மைய அரசு ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு என்ற புதிய திட்டத்தை அறிமுகப் படுத்தியது. இத்திட்டத்தின் நோக்கம், வறுமைக்கோட்டின்கீழ் உள்ள கிராமப்புறப் பெண்களிடம் அவர்களது மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் குறித்து விழிப்புணர்ச்சியை உருவாக்கி அவர்களிடத்தில் சேமிப்பு மற்றும்

திட்டத்தின் ஓர் உட்பிரிவாக 1995-96 ஆம் நிதியாண்டில் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் நலனுக்காக மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் நோக்கங்கள்.

டோக்ரா பெண்களின் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளக் காப்பகங்கள் அமைத் தல்.

டோக்ரா குழுக்களின் கல்வியறி வற்ற பெண்களுக்குப் படிப் பறிவையூட்டுதல், டோக்ராவின் கீழ் பணிபுரியும் மகளிரின் பெண் குழந்தைகளுக்குக் கல்வியறி வூட்டும் மையங்களை அமைத் தல்.

டோக்ரா அங்கத்தினர்களின் பெண் குழந்தைகளைக் கவனிப் பதில் பாலினப் பாகுப்பாடின்றி அவர்களுக்குச் சத்துணவுத் தடுப்பூசி போடுதல் ஆகிய வற்றுக்குத் தனிக்கவனம் செலுத் துதல்.

டோக்ரா அங்கத்தினர்களின் உடல்ஊனமுற்ற சிறார்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்குதல்.

பெண் குழந்தைகளை, உடல் ரீதியாகத் தவறாகப் பயன் படுத்துவதைக் களைவதில் சட்ட உதவி மற்றும் உடனடி நிவாரணம் வழங்குதல்.



கடன் வசதி நடவடிக்கைகள் மூலம் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்குவதே ஆகும். மேலும், இத்திட்டம் ஊரகப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் உள்ள பெண்களிடத் தில், பல துறைகளில் பெண் களின் நலனுக்காக அமல் படுத்தப்படும் திட்டத்தினை எடுத்துக் கூறுவதாகும்.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் கிராமப்புறப் பெண்களில் குறிப்பாக, 'டோக்ரா' திட்டத்தில் குழுக்களாகச் செயல்படும் பெண்களே இத்திட்டத்தில் பயனாளிகளாக இருக்கின் றார்கள். இத்திட்டத்தின் செல வினம் மைய மற்றும் மாநில அரசுகளால் 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. மேலும் 1996-97 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.11 இலட்சம் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## தேசிய கரிம எரிவாயுத் திட்டம்

தேசிய கரிம எரிவாயுத் திட்டம், தமிழ்நாட்டில் 1981-82 முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், குறைந்த செலவினத்தில் சிக்கன மாக எரிபொருள் பயன்படுத்தப் படுவதாகும்.

### மானியம்

1996-97 ஆம் ஆண்டில் மத்திய அரசால் அனுமதிக்கப் பட்ட மானிய விவரம் வருமாறு:

**மானியம்**

| கலனின் அளவு | இதரர்களுக்கு | பிற்படுத்தப்பட்ட/ தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு |
|---|---|---|
| 1. க.செ.மீ. | ரூ.1,500 | ரூ.2,000 |
| 2. க.செ.மீ. | ரூ.1,800 | ரூ.2,400 |
| 3. க.செ.மீ. | ரூ.2,000 | ரூ.2,600 |
| 4. க.செ.மீ. | | |
| 8 க.செ.மீ. | | |
| 10 க.செ.மீ. | | |

மேலும், கழிப்பறையுடன் வடியும் கரிம எரிவாயுக் கலன் களுக்குக் கூடுதல் மானியமாக ரூ.300 அனுமதிக்கப்படுகிறது.

### வங்கிக் கடன்

கரிம எரிவாயுக் கலன் அமைக்க வங்கிக் கடன் அனு மதிக்கப்படுகிறது.



### தொழில் நுட்ப உதவி

ஊராட்சிகளில் அமைக்கப் படும் கலன்களைப் பார்வையிட்டு, தொழில்நுட்ப உதவி அளிக்க வட்டார அளவில் ஊர்நல அலுவலர்/ஒன்றியப் பொறியாளர்/ வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளனர். மாவட்ட அளவில் திட்ட அலுவலர் கட்டுப்பாட்டில் பணிபுரியும் தொழில் நுட்ப உதவியாளர்கள் மற்றும் மாவட்ட அளவில் பயிற்சி பெற்ற கொத்தனார்கள் இத்திட்டத்தின் முன்னேற்றப் பணிக்கு உதவு கின்றனர்.

### பயன்களும் நோக்கங்களும்

1. எரிபொருள் சிக்கனம்.


2. வனத்தைப் பாதுகாத்தல்.

3. பயிருக்குத் தேவையான நல்ல உரம் பெறுதல்.

4. மகளிர் மற்றும் குழந்தை களின் நலம் பேணுதல்.

### தேசிய மேம்படுத்தப்பட்ட சூளா திட்டம்

மத்திய எரிசக்தி நிறுவனம் தேசிய மேம்படுத்தப்பட்ட சூளா திட்டம், 1983 முதல் செயல்படுத் தப்படுகிறது. இத்திட்டம், மாவட்



டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் மத்திய அரசின் திட்டமாகச் செயல்படுத்தப்படு கிறது.

### இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

மாற்று எரிசக்தி, காட்டுவனத் தைப் பாதுகாத்தல், மகளிர் மற்றும் குழந்தைகள் நலம், கண் மற்றும் இருதய நோயைக் கட்டுப்படுத்துதல், பயிற்சிபெற்ற சுயவேலைவாய்ப்புப் பணியாளர் மூலம், சூளா அடுப்பு நிறுவுதலும், பழுதுபார்த்தலும்.

தமிழ்நாட்டில் உள்ள 33,02,958 ஊரகக் குடும்பங்களில் 31.3.96 முடிய 17,36,002 குடும்பங்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப் பட்டுள்ளது.

### நிலையான அடுப்பு

நிலையான சூளா அமைப் பதற்கு ஆகும் செலவில் 50 சதவீதம் அல்லது ரூ.40 சதவீதத் திற்கு மிகாமல் அரசு மானியம் வழங்கப்படுகிறது.

### எடுத்துச் செல்லத்தக்க அடுப்பு மானிய விவரம்:

பொதுப் பிரிவு 33 சதவீதம் அதிகபட்ச பங்குத்தொகை ரூ.40.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், மலைப்பகுதி 50 சதவீதம் அதிகப்பட்ச பங்குத் தொகை ரூ.50.

1996-97ஆம் ஆண்டில் அடியிற்கண்டவாறு மேம்படுத்தப் பட்ட 'சூளா' நிறுவத் திட்ட மிடப்பட்டுள்ளது.

நிலையானது 50,000, எடுத்துச் செல்லக்கூடியது 1,75,000. ஆக மொத்தம் 2,25,000 ஆகும்.

வறுமை ஒழிப்பு மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்கள், இவ்வாறாகத் தமிழக அரசால் சிறப்புற நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வெ. இறையன்பு, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
இணை இயக்குநர்: பா. செயப்பிரகாசம், துணை இயக்குநர்: ஆர். அண்ணாதுரை, உதவி இயக்குநர்: எம். அண்ணாமலை
ஆசிரியர் குழு: கே.டி. புகழேந்தி, ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள்: என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை - 600 002. தொலைபேசி:எண்: 568926, 568927




# ஆசிரியர் மடல்:

## கோடையிலே இளைப்பாறும்.....

தேர்வுகள் முடிகின்ற நேரம் நெருங்கிக்
கொண்டிருக்கிறது.
மாணவர்கள் முகங்களில் பதட்டமும், பயமும்;
தேர்வுகளுக்காகவே வாசிக்கிற பழக்கம்
ஏற்பட்டுவிட்டது.
இன்னும் சில நாட்களில்
விடுமுறை என்கிற இலக்கு;
விடுமுறை மட்டுமா அது?
ஒரு வகையில் விடுதலையும் கூட.
இந்த விடுமுறை நாட்களை எப்படிக் கழிப்பது?
நாட்கள், கழிப்பதற்காக அல்ல, களிப்பதற்காக.
நம்மில் புதிய இதழ்கள் சில விரிந்து
நறுமணத்தை நாம் பூசிக்கொள்வதற்காக.
இந்த விடுமுறை நாட்களிலும் ‘அடுத்த வருடப்
படிப்பிற்குத் தயார் செய்துகொள்’
என்று மாணவர்களை மறுபடியும்
பள்ளிநாட்களின் நீட்டிப்புக்கு உட்படுத்த
வேண்டுமா?
பெற்றவர்கள் சிந்திக்கவேண்டும்.
அந்தப் பாடத்திற்கும் இந்தப் பாடத்திற்கும் தனி
வகுப்புகளுக்கு அனுப்புகிற
பெற்றோர்களைப் பார்க்க முடிகிறது.
இந்த நாட்களில் குழந்தைகளை மிகுந்த
சிந்தனைக்கு உட்படுத்தவேண்டும்.
அவற்றோடு நிறையப் பகிர்ந்து கொள்ள
வேண்டும். அவை பேசட்டும்;
அவற்றைப் பெற்றோர்கள் உற்றுக் கேட்கட்டும்.
அவற்றின் உலகத்தைக் கொஞ்சம்
புரிந்து கொள்ள முயலட்டும்.
அந்த உலகம் எவ்வளவு அழகானது
என்பதை அறிந்துகொள்ள
மனதைத் திறந்துவைத்துக் கொள்ள வேண்டிய
அவசியம் பெற்றோர்களுக்கு எப்போதும் உண்டு.
நம் உலகத்தையே அவர்கள்மீது
திணித்தது போதும்!
அவர்களை அழைத்துச்சென்று
கடலுக்கும், மலைகளுக்கும்,
அழகான இசைக்கும், நடனத்திற்கும்,
சிறபததிறகும் பாடத்தோடு தொடர்பில்லாத
இனிய புததகங்களுக்கும் அறிமுகப்படுத்தி
வைக்கிற கடமை நமக்கு உண்டு!
இந்த நாட்டிற்காக, மொழிக்காக
அயராது பாடுபட்ட
தலைவர்களைப் பற்றி அவர்களிடம்
பரிமாற வேண்டும்.
எதுவும் இயல்பாக;
மலரிலிருந்து தேனீ மகரந்தம் சேர்ப்பதைப் போல
1 கிலோ தேனைச் சேகரிக்க 5 லட்சம்
மலர்களைத் தேனீக்கள்
புலன் விசாரணை செய்ய வேண்டியதாக
இருக்கிறது.
நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமான
மாற்றத்திற்குட்படுத்துதல்
அதிகப் பயனை விளைவிக்கும்;
சொல்ல வேண்டியதை ஒரு கதையாக
உருவகக் கவிதையாக
பண்பட்ட பழமொழியாகச் சொல்கிறபோது
அதிகப் பலன் உண்டு.
இருப்பதைக் காட்டிக்கொள்ளாமல்
இதயம் துடித்து இயங்க வைப்பதுபோல்
அந்தச் செய்தி அவர்களை அமைதியாக அடையும்.
விடுமுறை என்பது மனதையும்,
எண்ணங்களையும் புதுப்பித்துக் கொள்கிற
நிகழ்வாக மாறவேண்டும்.
இரண்டு சொற்களுக்கு இடையே இருக்கிற
இடைவெளி போல்,
இரண்டு எழுத்துக்களுக்கு நடுவே உள்ள
வெற்றிடம் போல்,
கோடை விடுமுறை என்பது இரண்டு
கல்வியாண்டுகளுக்கு இடையே மிகுந்த
முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்
பெற்றவர்களே உணர வேண்டும்!











தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23